



புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM | VARALARUU | PUDUGAIVARALARU | VARALARUU | 7502051351







## ஜெயலலிதாவுக்கு எதிராக அண்ணாமலை திட்டமிட்டு அவதூறு

# உள்நோக்கம்

### அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடந்த மாவட்டச் செயலாளர் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம், ஆகஸ்ட் மாதம் மதுரையில் நடைபெற உள்ள மாநாடு குறித்தும் விவாதிப்பு





சென்னை , ஜூன்.14–

**மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நற்பெயருக்கும், புகழுக்கும் களங்கும் விளைவிக்கும் வகையில், பொதுவெளியில் எந்தவிதமான அரசியல் அனுபவமும், முதிர்ச்சியுமற்ற பாஜகவின் மாநிலத் தலைவர் அண்ணாமலை திட்டமிட்டு உள்நோக்கத்துடன் அவதூறு பரப்பியதற்கு கண்டனம் தெரிவிப்பதாக அதிமுக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.**

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில், அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று மாவட்டச்செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் விவரம்: அதிமுக பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்நாடு முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிசாமி தலைமையில், மாவட்டச்செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில், ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு பேட்டி அளித்துள்ள பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலைக்கு கண்டனம் தெரிவித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

அதிமுகவின் காவல் தெய்வமும், தமிழ்நாடு முன்னாள் முதல்வருமான ஜெயலலிதா, ஒன்றரைக் கோடி தொண்டர்களுடைய மனதிலும், பொதுமக்கள் மனதிலும் நீங்கா இடம்பிடித்து, வாழும் தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கிறார். இரண்டு நாட்களுக்கு முன்பு ஓர் ஆங்கில பத்திரிகைக்கு, பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை, மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் நற்பெயருக்கும், புகழுக்கும் களங்கம் ஏற்படுத்தும் நோக்கத்தில் பொதுவெளியில் ஏற்றுக்கொள்ள முடியாத, திட்டமிட்டு உள்நோக்கத்துடன் அவதூறு கருத்தை பேட்டியாகக் கொடுத்துள்ளார். இதன் காரணமாக, ஜெயலலிதாவின் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் மனதில் மிகுந்த வேதனையையும், மன உளைச்சலையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களான வாஜ்பாய், அத்வானி மற்றும் தேசிய அளவிலான பல்வேறு கட்சிகளின் மூத்த தலைவர்கள், பிற மாநில முதல்வர்கள் உள்ளிட்ட தலைவர்கள் பலரும் ஜெயலலிதா மீது மிகுந்த மதிப்பும், மரியாதையும் கொண்டிருந்தார்கள். தேசிய தலைவருக்கு நிகரான ஜெயலலிதாவை, பல தலைவர்கள் அவரது இல்லத்திலேயே நேரில் சந்தித்து ஆலோசனை நடத்தி இருக்கிறார்கள். பிரதமர் நரேந்திர மோடி, ஜெயலலிதா மீது மிகுந்த மதிப்பும், மரியாதையும் வைத்திருக்கிறார். சென்னையில், அவரது இல்லத்தில் சந்தித்து பல்வேறு ஆலோசனைகளையும் நடத்தி இருக்கிறார்.

தற்போதைய தேசியக் கட்சியான பாரதிய ஜனதா கட்சி, மத்தியில் ஆட்சிக்குவருவதற்குமூலக் காரணமே, ஜெயலலிதா தமிழகத்தில் அதிமுக தலைமையில் கூட்டணி அமைத்து அறிமுகப் படுத்தியதுதான். 1998-ஆம் ஆண்டு முதன்முதலில் மத்தியில் பாஜக ஆட்சி அமையப் பெற, ஜெயலலிதா பெரும்பான்மையான கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை அளிக்கச் செய்ததோடு, பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழகத்தில் வெற்றி பெறுவதற்கும் அரும்பாடுபட்டவர்.

அதேபோல், 20 ஆண்டு காலமாக தமிழக சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் இல்லாமல் இருந்த பாஜகவுக்கு 4 சட்டமன்ற உறுப்பினர்களை பெற்றுக் கொடுத்தவர் கட்சியின் பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், தமிழ்நாடு முன்னாள் முதல்வர் எடப்பாடி மு. பழனிசாமி தலைமையிலான அதிமுக.

தமிழ்நாட்டின் முதல்வராக ஜெயலலிதா 16 ஆண்டுகள் பதவியில் இருந்து, பல்வேறு வரலாற்றுச் சிறப்பு மிக்க மக்கள் நலத் திட்டங்களை நிறைவேற்றி, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவர். அவரது திட்டங்களை மற்ற மாநிலங்களும் பின்பற்றும் வகையில் சிறப்புமிகு நல்லாட்சியை வழங்கியவர். தேசிய அளவில் பல்வேறு திட்டங்களுக்கு முன்னுதாரணமாக வழிகாட்டிய மகத்தான தலைவர் ஆவார். தமிழ்நாட்டின் வரலாற்றில் ஆண்ட கட்சியை மீண்டும் ஆட்சியில் அமரவைத்து சாதனை படைத்தவர் ஜெயலலிதா.

இத்தகைய போற்றுதலுக்குரிய ஜெயலலிதாவை, பொதுவெளியில் எந்தவிதமான அரசியல் அனுபவமும், முதிர்ச்சியும் அற்ற பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை திட்டமிட்டு, உள்நோக்கத்துடன் பொறுப்பற்ற முறையில் பேட்டி அளித்துள்ளதற்கு, அதிமுக சார்பில் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று அந்தத் தீர்மானதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கூட்டத்தில் மாவட்ட செயலாளர்கள், பிற மாநிலக் செயலாளர்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில், ஏற்கெனவே உறுப்பினர்களாக இருப்பவர்களின் பதிவை புதுப்பித்தல் மற்றும் புதிய உறுப்பினர்களை சேர்த்தலுக்கான பணிகளை மேலும் விரைவுபடுத்துவது குறித்தும், ஆகஸ்ட் 20 அன்று மதுரையில் நடைபெற உள்ள மாநாட்டை எழுச்சியுடன் நடத்துவது சம்பயதமாகவும் விவாதிக்கப்பட்டது.

## சென்னை காலநிலை மாற்ற செயல் திட்ட அறிக்கை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்




சென்னை , ஜூன்.14–

சென்னை காலநிலை மாற்ற செயல் திட்ட வரைவு அறிக்கையை செப்டம்பர் மாதம் சி-40 அமைப்பு வெளியிட்டது. இதில் சென்னையின் காலநிலை மாற்றம், பசுங்குடில் வாயுவின் இருப்பு மற்றும் இடர் மதிப்பீடு, காலநிலை மாற்ற அபாய மதிப்பீடு, காலநிலையால் சென்னைக்கு ஏற்படும் ஆபத்து மற்றும் பாதிப்பு, அதிக மழைப்பொழிவு, வெள்ள அபாயம், உள்கட்டமைப்பு, எதிர்காலங்களில் ஏற்படக்கூடிய வெள்ள அபாயம், கடல் மட்ட உயர்வு, அதிகரிக்கும் வெப்பத்தின் தாக்கம் ஆகியவை குறித்து செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் தொடர்பாக தெரிவிக்கப்பட்டு இருந்தது. மேலும், இது தொடர்பான மாநாட்டில் 2070-ம் ஆண்டுக்குள் இந்தியா கரிம சமநிலையை அடையும் என கூறப்பட்டிருந்த நிலையில், அதற்கு முன்னதாக 2050-ம் ஆண்டுக்குள் தமிழ்நாடு கரிம சமநிலையை எய்திட வேண்டும் என்ற முதலமைச்சரின் கூற்றை இலக்காக கொண்டு 6 தலைப்புகளில் செயல் திட்டம் தயார் செய்யப்பட்டு இருந்தது.

குறிப்பாக, இந்த அறிக்கையில் கடல் மட்டம் உயர்வால் 2100-ம் ஆண்டில் சென்னையில் 16 சதவீத பகுதிகள் கடலில் மூழ்கும் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது. மேலும், 28 பேருந்து நிறுத்தங்கள், 18 மெட்ரோ ரெயில் நிலையங்கள், 4 புறநகர் ரெயில் நிலையங்கள், 2 மின் நிலையங்கள் கடலில் மூழ்கும் என்று கூறப்பட்டு இருந்தது. இந்த வரைவு அறிக்கை தொடர்பாக பொதுமக்கள் தங்களின் கருத்துகளை தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டதில் 400 பேர் தங்களின் கருத்துகளை தெரிவித்திருந்தனர். இந்தக் கருத்துகளை பரிசீலனை செய்து இறுதி வரைவு அறிக்கை தயார் செய்யும் பணியில் சென்னை ஸ்மார்ட் சிட்டி நிறுவனம் ஈடுபட்டது. அதன்படி, சென்னை காலநிலை மாற்ற செயல் திட்ட இறுதி வரைவு அறிக்கை கடந்த டிசம்பரில் வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், சென்னை தலைமைச்செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டார். இதன் அடிப்படையில் பல்வேறு காலநிலை மாற்ற பணிகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ள உள்ளது. இந்த நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மெய்யநாதன், தலைமைச் செயலாளர் இறையன்பு, சுற்றுச்சூழல் துறை செயலர் சுப்ரியா சாகு, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## "எந்த மாநிலத்திலும் நடக்காத அவல நிலை இது" தலைமைச் செயலக 'ரெய்டு' காரணம் குறித்து அண்ணாமலை

சென்னை , ஜூன்.14–

"தமிழக அரசின் தலைமைச்செயலகத்தில், மத்திய புலனாய்வு அமைப்புகளின் சோதனை நடைபெறுவது இது முதல் முறை அல்ல. இதற்கு முன்பு கூட தலைமைச் செயலகத்தில் சோதனை நடைபெற்றிருக்கிறது" என்று பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இன்றைய தினம் (நேற்று) தமிழக அரசு தலைமைச்செயலகத்தில், பதவியில் உள்ள அமைச்சர் ஒருவரின் அறையில் அமலாக்கத் துறை சோதனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழக அரசின் தலைமைச்செயலகத்தில், மத்திய புலனாய்வு அமைப்புகளின் சோதனை நடைபெறுவது இது முதல் முறை அல்ல. இதற்கு முன்பு கூட தலைமைச் செயலகத்தில் சோதனை நடைபெற்றிருக்கிறது.



தமிழக அரசியலில் மலிந்திருக்கும் ஊழல், தமிழகத்துக்கு கொண்டு வந்த மாபெரும் இழிவு, வேறு எந்த மாநிலத்திலும் நடக்காத அவல நிலை இது. அடிமட்டம் வரை ஊழலில் ஊறிப்போய் இருக்கும் இந்த அரசியல் போக்கைத்தான் மாற்ற விரும்புகிறேன்.

எங்கும் ஊழல், எதிலும் ஊழல் என்ற போக்கினால், அரசியல் மேல் தமிழக மக்கள் நம்பிக்கை இழந்து இருந்தனர். நேர்மையான அரசியலை, நல்லதொரு மாற்றத்தை எதிர்பார்த்து வெகுகாலம் காத்துக் கொண்டிருந்த நம் மக்களுக்கு, நரேந்திர மோடியின் நல்லாட்சி, அரசியல் மேல் நம்பிக்கையை மீட்டுக் கொடுத்திருக்கிறது.

ஊழலற்ற அரசு சாத்தியம் என்பதை உணரத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கை வீண் போகாது, தமிழகத்தில் ஊழலற்ற, மக்கள் நலன் ஒன்றே சார்ந்த அரசு அமையும். அதை நோக்கியே எங்கள் அரசியல் பயணமும் தொடரும்" என்று அவர் கூறியுள்ளார்.

## மூடப்பட்ட பார்களை திமுக அரசு திறக்கத் துடிப்பது ஏன்? அன்புமணி ராமதாஸ் விமர்சனம்

சென்னை , ஜூன்.14–

படிப்படியாக மதுவிலக்கு என கூறிக்கொண்டு, மூடப்பட்ட பார்களைத் திறக்க திமுக அரசு துடிப்பது ஏன் என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அன்புமணி ராமதாஸ் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் பார்களை அமைக்க சில கட்டுப்பாடுகளை விதித்து சென்னை உயர்நீதிமன்றத்தின் ஒற்றை நீதிபதி பிறப்பித்த ஆணையால் 560 பார்கள் மூடப்பட்டு, அரசுக்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும், அதைக்கருத்தில் கொண்டு ஒற்றை நீதிபதியின் தீர்ப்புக்கு எதிரான மேல்முறையீட்டு மனுவை விரைந்து விசாரிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வின் முன் டாஸ்மாக் நிறுவனம் முறையிட்டிருக்கிறது. குடிகளைக் கெடுக்கும் பார்களை திறக்கும் விவகாரத்தில் டாஸ்மாக் இவ்வளவு ஆர்வம் காட்டுவது கண்டிக்கத்தக்கது.



மது பார்கள் அமைக்கப்படவிருக்கும் கட்டிடங்களின் உரிமையாளர்களிடமிருந்து டாஸ்மாக் நிறுவனம் தான் தடையின்மை சான்றிதழ் பெற வேண்டும்; அனைத்து பார்களிலும் கண்காணிப்பு காமிராக்கள் பொருத்தப்பட வேண்டும் என்று கடந்த ஆண்டு அக்டோபர் 11-ஆம் நாள் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி அனிதா சுமந்த் ஆணையிட்டார். இந்தத் தீர்ப்பின் காரணமாக 560 மது பார்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகளை கோர முடியாமல் அவை மூடப்பட்டன. உயர்நீதிமன்றத் தீர்ப்பால் ஏற்பட்ட இந்த விளைவை தமிழ்நாட்டில் படிப்படியாக மதுவிலக்கை நடைமுறைப் படுத்துவதற்கான வாய்ப்பாகவே பார்க்க வேண்டும். ஆனால், அதற்கு மாறாக, தமிழ்நாட்டில் படிப்படியாக மதுவிலக்கை நடைமுறைப்படுத்தப் போவதாக ஒருபுறம் கூறிவரும் தமிழ்நாடு அரசு, இன்னொருபுறம் மூடப்பட்ட பார்களை விரைவாகத் திறக்க அனுமதிக்கும்படி நீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டுவது ஏன்?

கடந்த மே மாதம் 3-ஆம் தேதி செய்தியாளர்களிடம் பேசிய மதுவிலக்குத்துறை அமைச்சர் செந்தில் பாலாஜி,''டாஸ்மாக் வருமானத்தை நம்பி தமிழக அரசு நடக்கவில்லை. டாஸ்மாக் நிறுவனம் மூலம் வரும் வருமானத்தை வைத்து அரசை நடத்துவது போன்று சித்தரித்து செய்தி வெளியிடும் பத்திரிகை, தொலைக்காட்சி, செய்தி நிறுவனம் சமூக வலைத்தளம் என யாராக இருந்தாலும் சட்டபடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்'' என்று எச்சரிக்கை விடுத்திருந்தார். ஆனால், இப்போது 560 மது பார்கள் செயல்படாததால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது என்று நீதிமன்றத்தில் டாஸ்மாக் நிறுவனம் கூறியுள்ளது" ஒரு மாதம், ஒரு வாரத்தில் தமிழக அரசின் நிலைப்பாடு தலைகீழாக மாறியது ஏன்?

மதுவில்லாத தமிழகமே மகிழ்ச்சியான தமிழகமாக இருக்கும். எனவே, மூடப்பட்ட பார்களை திறக்கும் நோக்குடன் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறையீட்டை டாஸ்மாக் நிறுவனம் உடனடியாக திரும்பப்பெற வேண்டும். பேரவையில் அறிவித்தவாறு 500 மதுக்கடைகளை உடனடியாக மூடுவதுடன், மீதமுள்ள மதுக்கடைகளையும் அடுத்த ஓராண்டுக்குள் மூடி தமிழ்நாட்டில் முழு மதுவிலக்கை ஏற்படுத்த தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

மயிலாடுதுறை மாவட்டம் மங்கைநல்லூரில் டாஸ்மாக் கடையில் வாங்கிய மதுவை அருந்தியதால் பழனி குருநாதன், பூராசாமி ஆகிய இருவர் உயிரிழந்ததாக அவர்களின் குடும்பத்தினர் குற்றஞ்சாட்டி உள்ளனர். இதுகுறித்தும் விரிவான விசாரணை நடத்த தமிழ்நாடு அரசு ஆணையிட வேண்டும். " என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குண்டகவயல் காமாட்சி அம்மன் கோவில் திருவிழா : இரு சமூகத்தினரிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் போலீசார் பாதுகாப்போடு நடைபெற்ற நிகழ்ச்சி

அறந்தாங்கி, ஜூன்.14–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே குண்டகவயல் கிராமத்தில் ஸ்ரீ காமாட்சி அம்மன் திருக்கோயில் உள்ளது, இக்கோயிலில் ஆண்டுதோறும் வைகாசி பெருந்திருவிழா நடத்தப்படுவது வழக்கம்

கடந்த இரண்டாம் தேதி காப்பு கட்டுதலுடன் திருவிழா தொடங்கியது, தினசரி மண்டகப்படித்தாரர்கள் சார்பில் காமாட்சியம்மனுக்குசிறப்பு அபிஷேக அலங்காரம் மற்றும் தீபாராதனைகள் நடைபெற்றுவந்தன மேலும் பால்குடம், காவடி எடுப்பு நிகழ்ச்சியும், பொங்கல் திருவிழாவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிலையில் 10-ம் மண்டகப்படியில் உரிமை கோருவது தொடர்பாக இரு சமூகத்தினரிடையே பிரச்சினை எழுந்துள்ளது,



இதனிடையே ஒரு சமூகத்தினர் ஆவுடையார்கோயில் காவல் நிலையத்தில் மண்டகப்படி பிரச்னை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க புகார் அளித்தனர்

புகாரின் பேரில் இரு தரப்பினரையும் அழைத்து போலீஸ் விசாரணை நடத்திய நிலையில் மற்றொரு தரப்பினர் மாற்று சமூகத்தினரை மண்டகப்படியில் சேர்க்க முடியாது என மறுப்பு தெரிவித்தனர்.

இந்நிலையில் இரு தரப்பினரையும் அறந்தாங்கி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சமாதான கூட்டத்திற்கு போலீசார் அனுப்பி வைத்தனர். அறந்தாங்கி வட்டாட்சியர் அலுவலக கூட்டத்தில் நடைபெற்ற சமாதான கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை செயல் அலுவலர் முத்துக்குமரன் மற்றும் குண்டகவயல் கிராமத்தார்கள் கலந்து கொண்ட நிலையில் 10-ம் மண்டகப்படியில் மற்றொரு சமூகத்தினரையும் சேர்த்து வழிபடவும் அவர்களுக்கு போலீசார் பாதுகாப்பு வழங்கவும் அறந்தாங்கி வட்டாட்சியர் பாலகிருஷ்ணன் உத்தரவிட்டார்.

அதனை தொடர்ந்து பத்தாம் மண்டகப்படி நடைபெற்ற நிலையில் இரு சமூகத்தினரும் இணைந்து மண்டகப்படி நடத்தினர், தொடர்ந்து இரண்டு சமூகத்தினருக்கும் இடையே மண்டகப்படி பிரசாதம் வாங்குவதில் கருத்து வேறுபாடு இருந்ததால் இந்து சமய அறநிலைத்துறை அறந்தாங்கி வீரமாகாளியம்மன் கோவில் எழுத்தர் வடிவேல் மண்டகப்படி பிரசாதத்தை பெற்றுக் கொண்டார்.

இரு சமூகத்தினரிடையே மண்டகப்படி நடத்துவதில் பிரச்சனை ஏற்பட்டதால் அறந்தாங்கி மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் சாந்தகுமாரி தலைமையிலான 20க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்போடு பத்தாம் மண்டகப்படி நிகழ்ச்சி நடைபெற்றது

# இன்று

14-6-23



சர்வ ஏகாதசி

தீர்கடுப்பு தீர்க்க வெங்காயம் பச்சையாக சாப்பிடலாம்.
சக வருடம் 1945 ஜ்யேஷ்டம் 24

| சோபகிருது வைகாசி 31 | JUN - WED புதன் | துல்கஃதா 24 | இராசிபலன் |
|---|---|---|---|
| | | தேய்பிறை 165 / 200 | |

தேய். ஏகாதசி 12.45 (கா. 10.59) அசுபதி 24.49 (மா. 02.49) தியாஜ் 15.08, 48.53 அகஸ் 31.29 மரண 24.49 மேல் சித்த. சர்வ ஏகாதசி. கூர்ம ஜெயந்தி. ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீவைகுண்டபதி புறப்பாடு. திருமாலிருஞ்சோலை ஸ்ரீகள்ளழகர் புறப்பாடு. சிறிய நகசு.

| நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை : 9.30-10.30 | 1.30-2.30 | 12.00 | 10.30 | 07.30 |
| மாலை : 4.30-5.30 | 6.30-7.30 | 01.30 | 12.00 | 09.00 |

சூலம் : வடக்கு; பரிகாரம் : பால்; ரிஷப லக்கனம் இருப்பு நா. 0 வி. 18; சந்திராஷ்டமம் உத்திரம் ஹஸ்தம்; கரணம் : 6-7.30; சூரிய உதயம் : 5.53

வாய் சொல் வாளை காட்டிலும் அதிகம் வெட்டும்

இராசிபலன்: மேஷம் - நிறைவு; ரிஷபம் - பெருமை; மிதுனம் - பொறுமை; கடகம் - வெற்றி; சிம்மம் - கவலை; கன்னி - சோதனை; துலாம் - ஊக்கம்; விருச்சி - மகிழ்ச்சி; தனுசு - நலம்; மகரம் - தடங்கல்; கும்பம் - செலவு; மீனம் - சுகம்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

**சோகங்கள் நமக்குச் சொந்தமானது அல்ல. அதைத் தக்க வைத்துக் கொள்வதும் தகர்த்தெறிவது அவரவர் துணிவில் தான் இருக்கிறது.**


புதுக்கோட்டையில் மிகப்பெரிய தங்க நகை ஷோரூம்
ஸ்ரீ பார்வதி'ஸ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை தயாரிப்பாளர்கள்
TS.No.3208 கீழராஜ வீதி, புதுக்கோட்டை – 1
Cell : 98433 07916,04322233544

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 5,590 | Rs. 6,058 |




# தமிழக மாநில தலைமைத் தகவல் ஆணையராக முன்னாள் டிஜிபி ஷகீல் அக்தர் நியமனம்

சென்னை, ஜூன்.14–

தமிழகத்தின் மாநில தலைமைத் தகவல் ஆணையராக ஓய்வு பெற்ற ஐபிஎஸ் அதிகாரி ஷகீல் அக்தர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் தமிழகத்தின் முன்னாள் டிஜிபி என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் பிஹார் மாநிலத்தைச் சேர்ந்தவர். 1989 ஆம் ஆண்டு ஐபிஎஸ் அதிகாரியானார். அண்மையில்தான் சிபி - சிஐடி டிஜிபி பணியில் இருந்து ஓய்வு பெற்றார். இந்நிலையில் அவர் தமிழகத்தின் மாநில தலைமைத் தகவல் ஆணையராக ஓய்வு பெற்ற ஐபிஎஸ் அதிகாரி ஷகீல் அக்தர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.



அவர் இந்த மாநில தலைமைத் தகவல் ஆணையர் பதவியில் 3 ஆண்டுகள் அல்லது 65 வயதை எட்டும்வரை இருப்பார். இதில் எது குறைவான காலமோ அது அவரது ஓய்வுக்கான காலமாகக் கருதப்படும்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அடிப்படையில், தமிழக அரசின் சார்பில் கடந்த 2005-ம் ஆண்டு மாநில தகவல் ஆணையம் உருவாக்கப்பட்டது. கடந்த ஆறு மாதங்களாக இந்தப் பதவி நிரப்பப்படாமல் இருந்தது. இது தொடர்பாக பல்வேறு விமர்சனங்களும் எழுந்தன. இந்த நிலையில், தமிழக மாநில தலைமை தகவல் ஆணையராக முன்னாள் டிஜிபி ஷகில் அக்தரை ஆளுநர் ஆர்.என். ரவி நியமித்துள்ளார்.

மேலும், மாநில தகவல் ஆணையர்களாக ஓய்வு பெற்ற ஏடிஜிபி தாமரைக் கண்ணன், வழக்கறிஞர் பிரியகுமார் டாக்டர் திருமலைமுத்து, மற்றும் பேராசிரியர் டாக்டர் எம்.செல்வராஜ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# அரசு மருத்துவர்களுக்கு பணிச் சுமையும் இல்லை மன அழுத்தமும் இல்லை அமைச்சர் மா.சுப்பிரமணியம்





சென்னை , ஜூன்.14–

தமிழகத்தில் அரசு மருத்துவர்களுக்கு பணிச் சுமையால் மன அழுத்தம் சார்ந்த எந்தப் பிரச்சினையும் இல்லை என்று மருத்துவம் மற்றும்மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மா.சுப்பிரமணியம் நேற்று சென்னையில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவரிடம், மருத்துவர்களின் பணிச் சுமை காரணமாக மன அழுத்தத்தினால் அவர்களுக்கு மாரடைப்பு ஏற்படுவது அதிகரித்து வருவதாக வந்த செய்திகள் குறித்து பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதுகுறித்து அவர் பதிலளிக்கும்போது, "மாரடைப்பைப் பொறுத்தவரை அனைத்து தரப்பினருக்கும், வயதினருக்கும் வந்து கொண்டிருக்கிறது. எனவே தேவையில்லாத பீதியைக் கிளப்ப வேண்டாம். இங்குள்ள மருத்துவர்களுக்கு பணிச் சுமையால் எந்தவித மன அழுத்தப் பிரச்சினையும் இல்லை. எனவே இதுபோன்ற பதற்றமான சூழ்நிலையை பத்திரிகையாளர்கள் உருவாக்குவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். தேவைப்பட்டால் இதுகுறித்து மருத்துவர்களிடமே நேரடியாகவே பத்திரிகையாளர்கள் ஆய்வு நடத்தலாம்.

அதேபோல் இங்கு மருத்துவப் பணியிடங்கள் 100% காலியாக இருப்பது போன்ற மாயத் தோற்றத்தை ஏற்படுத்துவது தவறு. இங்குள்ள 1021 காலி மருத்துவப் பணியிடங்களை நிரப்புவதற்கு எம்.ஆர்.பி மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1021 இடங்களுக்கு தற்போது 24,000 மாணவர்கள் தேர்வு எழுதி இருக்கிறார்கள். தமிழில் தேர்வு எழுதியவர்களுக்கான முடிவு வெளியிடப்பட்டுவிட்டது. இறுதித் தேர்வு முடிவுகள் விரைவில் வெளியிடப்படும். இவ்வாறு பணியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன" என்று தெரிவித்துள்ளார்.


கார்த்திக் மெஸ்
உயர்தர அசைவ உணவகம்
Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்
சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்
புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்
புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை
செல் : 94426 42437


## ஆவுடையார்கோவிலில்

# முன்னாள் முதல்வர் கலைஞரின் நூற்றாண்டு விழாவையொட்டி மரக்கன்று நடும் விழா



ஆவுடையார்கோவில், ஜூன்.14–

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவிலில் முன்னாள் முதல்வர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆவுடையார்கோவில் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி எதிரேநெடுஞ்சாலையின் இருபுறமும் நேற்று அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி ராமச்சந்திரன் தலைமையில் மரக்கன்று சாலையின் இருபுறமும் நடும் விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில்ஆல்,அரசு, வேம்பு ,நாவல் போன்ற மரங்களை முதலில் அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.ராமச்சந்திரன் நட்டு, நீர் தெளித்தார். பிறகு திமுக மாவட்ட கவுன்சிலர் கே.கே.சி.இராமநாதன், காங்கிரஸ் கட்சியின் ஆவுடையார்கோவில் பொறுப்பாளர் கூடலூர் முத்து. புண்ணியவயல் ஒன்றிய கவுன்சிலர் செந்தில்குமரன், ஆவுடையார் கோவில் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் தாமரைச்செல்வன், திமுக இளைஞரணி மாவட்டப் பொறுப்பாளர் சதீஷ், ஆவுடையார் கோவில் நெடுஞ்சாலை துறை பொறியாளர் உட்பட 50க்கும் மேற்பட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இந்த ஆண்டு முழுவதும் 5 லட்சம் மரக்கன்றுகள் நடப்படும் என்று திமுகவின் பொறுப்பாளர்கள் கூறிச் சென்றுள்ளனர்.

# அரியலூர் மாவட்டம் இருங்களா குறிச்சி கிராமத்தில் கபாடி போட்டி

அரியலூர், ஜூன்.14–

செந்துறை அருகே, இருங்களாக்குறிச்சி கிராமத்தில், மூன்று நாட்கள் தொடர் கபாடி போட்டிகள் நடைபெற்றன.

அரியலூர் மாவட்டம், செந்துறை தாலுக்கா, இருங்களாக்குறிச்சி கிராமத்தில், மாவீரன் பாசறை கபாடி கழகம், மற்றும் அமைச்சுசூர் கபாடி கழகம் இணைந்து நடத்திய, இரண்டாம் ஆண்டு கபாடி போட்டிகள் தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற்றது. இருங்களாக்குறிச்சி மாரியம்மன் கோவில் திடலில், ஆர்.ராஜ்குமார் தலைமையில், ரஞ்சித், ராம், மணி, அருள்ராஜ், ஹரிகிருஷ்ணன், ராமச்சந்திரன் உள்ளிட்டோர், முன்னிட்டு நடத்திய இந்த கபாடி போட்டிகளை, திமுக முன்னாள் வடக்கு ஒன்றிய செயலாளர் மு. ஞானமூர்த்தி தொடங்கி வைத்தார், ஆண்கள் மற்றும் பெண்கள் அணிக்கான போட்டிகள் தனித்தனியே நடைபெற்றது.



அரியலூர் மற்றும் கடலூர் மாவட்டங்களை சேர்ந்த, 44 அணிகளின் வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்று விளையாடிய, கபாடி போட்டிகளின் நிறைவு நாள் நிகழ்ச்சியில், ஆண்களுக்கான போட்டியில், முதலிடம் பெற்ற அணிக்கான வெற்றி கோப்பை மற்றும் முப்பதாயிரம் ரூபாய் பரிசு தொகையை, வன்னியர் சங்கத்தின் முன்னாள் மாநிலத் செயலாளர் கா. வைத்தி வழங்கினார்.

மேலும் இரண்டாம் இடம் பெற்ற அணிக்கு, புதுப்பாளையம் ராமசாமி படையாட்சி சார்பில் 25 ஆயிரம் ரூபாய் பரிசுத்தொகை மற்றும் அதற்கான கோப்பை, மூன்றாம் இடம் பெற்ற அணிக்கு, பூமுடையான் குடிக்காடு கிராமத்தை சேர்ந்த துரைராஜ் வழங்கிய 20 ஆயிரம் ரூபாய் பரிசு தொகை மற்றும் அதற்கான கோப்பை, நான்காம் இடம் பெற்ற அணிக்கு இருங்களாக்குறிச்சி கிராமத்தை சேர்ந்த முன்னாள் திமுக ஒன்றிய கவுன்சிலர் ராஜா அண்ணாமலை வழங்கிய ரூபாய் 15,000 பரிசுத்தொகை மற்றும் கேடயம், ஆண்களுக்கான பிரத்தியேக போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கான கோப்பை என் சி பி டிரான்ஸ்போர்ட் சார்பில் வழங்கப்பட்டது.

பெண்களுக்கான போட்டியில் முதலிடம் பெற்ற அணிக்கு, திமுக ஒன்றிய கவுன்சிலர் ஆ. தமிழ்மாறன் சார்பில் 20,000 ரூபாய் பரிசுத்தொகை, இரண்டாம் இடம் பெற்ற அணிக்கு இருங்களாக்குறிச்சி மாவீரன் பாசறை கமிட்டி சார்பாக 15,000 ரூபாய் பரிசு தொகை, மூன்றாம் இடம் பெற்ற அணிக்கு ஆர்.எஸ். மாத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் பழனிவேல் சார்பாக பத்து ஆயிரம் ரூபாய் பரிசு தொகை, நான்காம் இடம் பெற்ற அணிக்கு குறிச்சிகுளம் கே என் ஜே டிராவல்ஸ் சார்பில் எட்டாயிரம் ரூபாய் பரிசு தொகை, மேலும் பெண்களுக்காக நடத்தப்பட்ட பிரத்தியேக கபாடி போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு பாண்டுரங்கன் மற்றும் ஜெயராமன் வெண்ணிலா சார்பிலான கோப்பை வழங்கப்பட்டது.

இருங்களாக்குறிச்சி கிராமத்தில் கபாடி போட்டிகள் நடத்துவதற்கு, திமுக கிளை செயலாளர் அமிர்தலிங்கம், ஸ்ரீதர் சிமெண்ட் ஒர்க்ஸ் நிறுவனம், ஆலத்தியூர் ராம்கோ சிமெண்ட் ஆலை நிர்வாகம், உள்ளிட்ட பலரும் ஒத்துழைப்பு நல்கினர்.



புதுக்கோட்டைவடக்கு ராஜ வீதியில் உள்ள அரசு உயர் துவக்கப் பள்ளியில் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்கள் கோடை விடுமுறை முடிந்து மீண்டும் பள்ளிக்கு உற்சாகமாக மகிழ்ச்சியுடன் வருகை தந்தனர். வருகை புரிந்த அனைத்து மாணவர்களுக்கும் பள்ளியின் தலைமை ஆசிரியர் சிவசக்திவேல், ஆசிரியர் மீனாட்சிசுந்தரம், உள்ளிட்ட ஆசிரியர்கள் மகிழ்வோடு வரவேற்றனர். பின்னர் அனைவருக்கும் 2023-24 கல்வி ஆண்டுக்கான அனைத்து விலையில்லா புத்தகங்களையும், சீருடைகளையும் வழங்கிவாழ்த்தினர்.

# தமிழகத்தில் ஆண்டுக்கு ஒன்றரை லட்சம் அரசுப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும் பாமக நிறுவனர் ராமதாஸ்

சென்னை , ஜூன்.14–

தமிழகத்தில் ஆண்டுக்கு 1.5லட்சபேருக்கு அரசுவேலை வழங்க வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்ட அறிக்கையில், " தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் கடந்த ஆண்டு ஜூலை மாதம் 24-ஆம் நாள் நடத்தப்பட்ட தொகுதி 4 தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்படவுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையை, ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட 10,117 என்பதிலிருந்து உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை தேர்வு எழுதியவர்களால் கடந்த இரு மாதங்களாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. இந்தக் கோரிக்கை மிகவும் நியாயமானது. இந்தக் கோரிக்கையை தமிழ்நாடு அரசு கனிவுடன் ஆய்வு செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 10 ஆயிரம் நான்காம் தொகுதி பணியாளர்கள் அரசுப் பணிகளில் இருந்து ஓய்வு பெறுகின்றனர். காலியாகும் பணிகளை நிரப்ப வேண்டும் என்றாலும் கூட, ஆண்டுக்கு 10,000 நான்காம் தொகுதி பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஆனால், 2012-ஆம் ஆண்டு அறிவிக்கையின்படி 10,718, 2017-ஆம் ஆண்டு அறிவிக்கையின்படி 9,351, 2019-ஆம் ஆண்டு அறிவிக்கையின்படி 9,398 என கடந்த 11 ஆண்டுகளில்



29,951 நான்காம் தொகுதி பணியாளர்கள் மட்டும் தான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 3 ஆண்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள் தான் கடந்த 11 ஆண்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தெளிவாகக் கூற வேண்டுமானால், சராசரியாக ஆண்டுக்கு 2,722 நான்காம் தொகுதி பணியாளர்கள் மட்டும் தான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

11 ஆண்டுகளில் 1.10 லட்சம் நான்காம் தொகுதி பணியாளர்களை தேந்தெடுக்க வேண்டிய தமிழக அரசு, 30 ஆயிரத்துக்கும் குறைவான பணியாளர்களையே தேர்ந்தெடுத்திருக்கிறது. அப்படியானால், காலியிடங்களை நிரப்புவதாக இருந்தால் கூட, இந்த முறை குறைந்தது 80,000 நான்காம் தொகுதி பணியாளர்களை தமிழக அரசு தேர்வு செய்ய வேண்டும். ஆனால், கடந்த 30.03.2022 ஆம் நாள் வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி 7,301 நான்காம் தொகுதி பணியாளர்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது. பின்னர் 21.03.2023 ஆம் நாளிட்ட அறிவிப்பின்படி இந்த எண்ணிக்கை 10,117 ஆக அதிகரிக்கப்பட்டது. இது எந்த வகையிலும் போதுமானது அல்ல.

தமிழ்நாட்டில் இன்றைய சூழலில் நான்கரை லட்சம் அரசுப் பணியிடங்கள் காலியாக உள்ளன. நடப்பு திமுக அரசின் பதவிக்காலம் நிறைவடைவதற்கு முன்பாக இந்தக் காலியிடங்களை நிரப்ப வேண்டும் என்றால், ஆண்டுக்கு ஒன்றரை லட்சம் அரசு ஊழியர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். மாறாக ஒவ்வொரு ஆண்டும் அனைத்துவகைபணிகளுக்கும் சேர்த்து 10,000 பேர் கூட தேர்ந்தெடுக்கப் படுவதில்லை என்பது தான் உண்மை. நான்காம் தொகுதி பணிக்கான தேர்வு எழுதியவர்களின் கோரிக்கையில் உள்ள நியாயத்தையும், அரசுத்துறைகளின் தேவையையும் கருத்தில் கொண்டு கடந்த ஆண்டு நடத்தப்பட்ட போட்டித்தேர்வுகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படவுள்ள நான்காம் தொகுதி பணியாளர்களின் எண்ணிக்கையை இரு மடங்காக, அதாவது 20 ஆயிரமாக அதிகரிக்க தமிழக அரசு முன்வர வேண்டும்.

அதுமட்டுமின்றி, இனி வரும் காலங்களில் ஆண்டுக்கு ஒன்றரை லட்சம் அரசு பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். அதன் மூலம் தமிழ்நாட்டில் படித்து விட்டு வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களின் இருண்ட வாழ்வில் தமிழக அரசு ஒளியேற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# 2020 – 21 டெல்லி விவசாயிகள் போராட்டத்தின் போது ட்விட்டருக்கு இந்திய அரசு அழுத்தம் தந்தது முன்னாள் சிஇஒ பரபரப்பு குற்றச்சாட்டு

புதுடெல்லி , ஜூன்.14–

டெல்லியில் நடந்த விவசாயிகள் போராட்டத்தின் போது ஆயிரக்கணக்கானோரின் ட்விட்டர் கணக்குகள் குறித்த தகவல்களைப் பகிருமாறு மத்திய அரசு தங்களுக்கு அழுத்தம் கொடுத்ததாக ட்விட்டர் முன்னாள் தலைமை செயல் அதிகாரி ஜேக் டார்ஸி பரபரப்புக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அதேபோல்மத்தியஅரசைக் கடுமையாக விமர்சிக்கும் பத்திரிகையாளர்கள் கணக்குள் தொடர்பாகவும் நிறைய கோரிக்கைகளை இந்திய அரசு வைத்ததாக அவர் கூறியுள்ளார். அவ்வாறு பகிராவிட்டாலோ இல்லை அவர்கள்கூறியகணக்குகளை முடக்காவிட்டாலோ ட்விட்டர் ஊழியர்கள் மீது சோதனைகள் நடத்தப்படும் என்று எச்சரித்ததாகவும் டார்ஸி கூறியுள்ளார்.

திங்கள்கிழமை (ஜூன் 12) 'பிரேக்கிங் பாயின்ட்ஸ்' என்ற யூடியூப் நிறுவனத்துக்கு அளித்தப் பேட்டியில் ஜேக் டார்ஸி இதனைத் தெரிவித்துள்ளார். ட்விட்டர் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக இருந்தபோது எந்தெந்த வெளிநாடுகளில் இருந்து என்ன மாதிரியான அழுத்தங்களை அவர் சந்திக்க நேர்ந்தது என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு டார்ஸி இந்தப் பதிலைக் கூறியுள்ளார்.

அந்தக் கேள்விக்கு அவர் அளித்தப்பதிலில்,"டெல்லியில் நடந்த விவசாயிகள் போராட்டம் தொடர்பாகவும், தங்கள் அரசை விமர்சிக்கும் பத்திரிகையாளர்கள் தொடர்பாகவும் நிறைய முறை இந்தியா கோரிக்கைகள் விடுத்தது. அதற்கு நாங்கள் ஒத்துழைக்காவிட்டால் இந்தியாவில் ட்விட்டர் நிறுவனத்தைத் தடை செய்வோம் என்றும் மிரட்டியிருக்கிறது.ட்விட்டருக்கு இந்தியா மிகப் பெரிய சந்தை என்றநிலையில் அந்த மிரட்டல் விடுக்கப்பட்டது. அதையும் தாண்டி இந்தியாவில் உள்ள ட்விட்டர்ஊழியர்கள்வீடுகளில் ரெய்டு நடத்தப்படும் என்று எச்சரித்தது. அதை அவர்கள்



செயல்படுத்தவும் செய்தனர். இதுதான் இந்தியா என்ற ஜனநாயக தேசம். துருக்கியும் இந்தியாவைப் போலத்தான் நடந்து கொண்டது" என்றார். ஜேக் டார்ஸியின் இந்தக் குற்றச்சாட்டு பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

மவுனம் காக்கும் மத்திய அரசு:ட்விட்டர் முன்னாள் சிஇஓ கடுமையான குற்றச்சாட்டை முன்வைத்துள்ள நிலையில் மத்திய அரசு இது தொடர்பாக எதுவும் தெரிவிக்கவில்லை. இதற்கிடையில் எதிர்க்கட்சியினர் ஜேக் டார்ஸியின் பேட்டி அடங்கிய வீடியோ கிளிப்பைப் பகிர்ந்து மோடி அரசு இந்தக் குற்றச்சாட்டுக்கு பதிலளிக்க வேண்டும் என்று விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

நாட்டின் மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவரான ராஜ்தீப் சர்தேசாய் தனது ட்விட்டர் பக்கத்தில், "மோடி அரசு ட்விட்டர் நிறுவனத்துக்கு அழுத்தம் கொடுத்துள்ளது. விவசாயிகள், விவசாய இயக்கங்களின் கணக்குகளை முடக்கச் சொல்லியுள்ளது. மத்திய அரசை விமர்சித்த பத்திரிகையாளர்களின் கணக்கை முடக்கச் சொல்லியுள்ளது அல்லது ட்விட்டர் ஊழியர்கள் ரெய்டுக்கு ஆளாவார்கள் என்று சொல்லியுள்ளது. இதை ட்விட்டரின் முன்னாள் சிஇஓ ஜேக் டார்ஸி கூறியுள்ளார்" என்று பதிவிட்டுள்ளார்.

1,200 கணக்குகள்.. கடந்த 2021 பிப்ரவரியில் டெல்லியில் விவசாயிகள் போராட்டம் அதன் உச்சக்கட்டத்தை எட்டியிருந்தபோது மத்திய அரசு ட்விட்டர் நிறுவனத்திடம் 1,200 கணக்குகளை முடக்குமாறு கோரிக்கை விடுத்திருந்ததாக 'தி இந்து' ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டிருந்தது. அந்தக் கணக்குள் போராட்டக்காரர்களுடன் தொடர்புடையது. ஆனால் அரசு அவை காலிஸ்தான் ஆதரவாளர்களுடையது என்று சந்தேகிப்பதாகக் கூறி முடக்கக் கூறியிருந்தது என்று அச்செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தச் செய்தியின் அடிப்படையில் எதிர்க்கட்சிகள் அப்போது மத்திய அரசை விமர்சனங்களுக்கு உள்ளாக்கியது.

மேலும், இந்தக் கணக்கு முடக்கம் தொடர்பான ஆர்டிஐ கேள்விக்கு மத்திய அரசு தேசப் பாதுகாப்புக் காரணங்களுக்காக பதிலளிக்க முடியாது என்று கூறியதும் நினைவுகூரத்தக்கது. அதுமட்டுமல்லாமல், அப்போதைய ட்விட்டர் சிஇஓ ஜேக் டார்ஸி விவசாயப் போராட்டங்கள் தொடர்பான சில ட்வீட்களுக்கு லைக் இட்டதை விமர்சித்தது. ட்விட்டர் நிறுவனத்தின் நடுநிலைமையை மத்திய அரசு கேள்விக்கு உள்ளாக்கியது. இந்நிலையில் தான் ஜேக் டார்ஸி இந்திய அரசின் மீது பரபரப்பு குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்.

# பூச்சிஅத்திப்பேடு ஊராட்சியில் ஸ்ரீமதுரைவீரன், ஸ்ரீமுனீஸ்வரர், ஸ்ரீதேவிநாகாத்தம்மன் கோவிலின் 10-ம் ஆண்டு தீமிதி திருவிழா




ஊத்துக்கோட்டை, ஜூன். 14-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பூச்சிஅத்திப்பேடு ஊராட்சியில் லட்சுமி அம்மன் கோவில் தெருவில் பிரசித்தி பெற்ற ஸ்ரீமதுரைவீரன்,ஸ்ரீமுனீஸ்வரர் ஸ்ரீதேவிநாகாத்தம்மன் கோவில் உள்ளது.

இக்கோவிலில் 10-ம் ஆண்டு தீமிதி திருவிழா நிகழ்ச்சி நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதை முன்னிட்டு கடந்த வெள்ளிக்கிழமை காலை ஸ்ரீசெல்லியம்மன் ஆலயத்தில் இருந்து கங்கை நீர்,பால்குடம் எடுத்து வந்து அம்மனுக்கு பால் அபிஷேகம் செய்யப்பட்டது. மாலை பக்தர்களுக்கு காப்பு கட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது. இரவு தேர் பவனி சக்தி கிரகம் ஊர்வலம் நடைபெற்றது.

சனிக்கிழமை மதியம் கோவில் வளாகத்தில் கிராம பொதுமக்கள் சார்பாக அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இரவு அக்கினிக்கப்பரை ஊர்வலம் நடைபெற்றது. நேற்று முன்தினம் காலை ஸ்ரீசெல்லியம்மன் கோவிலிலிருந்து பால்காவடி அலங்கரிக்கப்பட்டு மேளதாளம் முழங்க ஊர்வலமாக கோவிலை வந்தடைந்தது. அதன் பின்னர், அம்மனுக்கு அபிஷேகம், அலங்காரம்,தூப-தீப ஆராதனை உள்ளிட்டவை நடைபெற்றது.

மாலை வேப்பம்பேடு கிராமம் ஸ்ரீசெல்லியம்மன் கோவிலிலிருந்து பூக்களாலும், மின்விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்ட அம்மன் சென்று புனித நீராடிய பக்தர்களை கோவிலுக்கு அழைத்து வரும் நிகழ்ச்சி கொட்டும் மழையில் நடைபெற்றது.பின்னர், கோவிலுக்கு அருகே அமைக்கப்பட்டு இருந்த தீ குண்டத்தில் ஒருவர் பின், ஒருவராக இறங்கி தீ மிதித்து தங்களது நேர்த்தி கடனை செலுத்தினர்.

இதன் பின்னர், அனைத்து பக்தர்களுக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. நேற்று காலை மஞ்சள் நீராட்டு விழா நிகழ்ச்சி நடைபெறுகிறது. மாலை சுமங்கலி பூஜை நடைபெற்றது. இன்று காலை விடையாற்றி உற்சவம் நடைபெறுகிறது.இதில்,சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை,நாகாத்தம்மன் கே.முரளி தலைமையில் பக்தர்களும், விழா குழுவினர்களும், பொதுமக்களும் சிறப்பாக செய்திருந்தனர்.



மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடமாடும் இசேவை வாகனத்தை மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி கொடியசைத்து தொடங்கி வைத்தார். அருகில் மயிலாடுதுறை CSC பொது சேவை மைய மேலாளர் பிரபாகரன், மயிலாடுதுறை மாவட்ட CSC சங்க தலைவர் கே.சம்பத், CSC சங்க செயலாளர் பி.மணிமாறன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடன் உள்ளனர்.

## வடமதுரை பேட்டைமேடு கிராமத்தில்

# காதல் மனைவியின் உறவினர்கள் தாக்கியதால் மனம் உடைந்த வாலிபர் தூக்கு போட்டு தற்கொலை

ஊத்துக்கோட்டை, ஜூன்14-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், வடமதுரை ஊராட்சி, பேட்டைமேடு கிராமத்தைச் சேர்ந்தவர் மணிகண்டன் (23) ஆவார்.இவர் இதே பகுதியைச் சேர்ந்த கங்கை அம்மன் கோவில் தெருவில் வசித்து வரும் சபி(வயது20) என்ற இளம் பெண்ணை காதலித்து மூன்று வருடங்களுக்கு முன்னர் திருமணம் செய்து கொண்டார் . இத்தம்பதியினருக்கு குழந்தைகள் இல்லை. இந்நிலையில், நேற்று முன்தினம் காலை சபி இப்பகுதியில் உள்ள அரச மரம் அருகே நின்று கொண்டு ஆண் நண்பருடன் பேசிக் கொண்டிருந்தார்.இதனை அறிந்த மணிகண்டன் தனது காதல் மனைவி சபியின் இச்சையலை கண்டித்தார்.



இதனால் ஆத்திரமடைந்த சபி தனது உறவினர்களுக்கு போன் செய்து மணிகண்டன் தன்னை தரக்குறைவாக பேசுவதாகவும் இதை உடனடியாக வந்து கண்டிக்க வேண்டும் என கூறினார். சம்பவ இடத்துக்கு வந்த சபியின் உறவினர்கள் மணிகண்டனை சரமாரியாக தாக்கினார்களாம். இதனால் அவமானம் அடைந்த மணிகண்டன் வீட்டிற்கு வந்து தூக்கு மாட்டி தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் குறித்து மணிகண்டனின் தாய் பிரியா பெரியபாளையம் காவல் நிலையத்தில் புகார் செய்தார். எனவே,போலீசார் வழக்கு பதிவு செய்து மணிகண்டனின் உடலை மீட்டு திருவள்ளூர் அரசு ஆஸ்பத்திரிக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்,மேலும்,வழக்கு பதிவு செய்து இந்த சம்பவம் குறித்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர். இப்பிரச்சினை இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சீர்காழி பாரத ஸ்டேட் வங்கி வாசலில் அமர்ந்து வாடிக்கையாளர்கள் தர்ணா போராட்டம்




சீர்காழி, ஜூன். 14-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே சோதியக்குடி, செம்பதனிருப்பு, புத்தூர் உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் பாரத ஸ்டேட் வங்கியில் கணக்கு வைத்துள்ளனர்.

இவர்களின் அன்றாட தேவைக்காக பணம் எடுக்க, புதிய கணக்கு துவங்குவதற்கும், வீடு கட்டுவதற்கு கடன், கல்வி கடன், 100 நாள் வேலை திட்டத்தின் பணம் எடுப்பதற்கு மற்றும் ஔபி என வாடிக்கையாளர்களின் அனைத்து தேவைகளை பெற வங்கி மூலமாக செய்ய வேண்டி உள்ளதால் சீர்காழியில் உள்ள பாரத ஸ்டேட் வங்கிக்கு வந்து தங்களது தேவைகளை செய்து வந்தனர்.

வங்கியில் அதிக அளவில் கூட்டம் இருப்பதால் வங்கி நிர்வாகம் இதற்காக அந்தந்த பகுதிகளில் பாரத வங்கியின் சேவை மையத்தை தொடங்கி கூட்டத்தை குறைத்து பொது மக்களுக்கு பயன்பெறுவகையில் செய்து வந்தனர்.

இந்த நிலையில் அந்தந்த பகுதியில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியின் சேவை மையம் சரியாக திறக்கப்படாததால் பொதுமக்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியது அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் தினந்தோறும் மக்கள் தங்கள் அன்றாட தேவைகளை செய்ய முடியாமல் அலைக்கழிக்க படுவதால் ஆத்திரமடைந்து வங்கி முன் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இதுகுறித்து வங்கி மேலாளர் உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தன் பேரில் தர்ணாவில் ஈடுப்பட்டவர்கள் கலைந்து சென்றனர்.

# காரைக்கால் மாவட்டத்தில் உள்ள அனைத்து சுகாதார நிலையங்களில் மக்கள் வாழும் இடத்திற்கே சென்று தீவிர வயிற்றுப் போக்கு முகாம்



காரைக்கால், ஜூன். 14-

காரைக்கால் நலவழித்துறை சார்பில் நலவழித்துறை இயக்குனர் ஸ்ரீராமுலு வழிக்காட்டுதல் படி காரைக்கால் மாவட்டத்தில் உள்ள அனைத்து சுகாதர நிலையங்களில் மக்கள் வாழும் இடத்திற்கே சென்று தீவிர வயிற்றுப் போக்கு முகாம் நடைப்பெற்றது.

அதனை தொடர்ந்து காரைக்கால் நேருநகர் பகுதியில் தீவிர வயிற்றுப் போக்கு முகாம் நடைபெற்றது முகாமினை காரைக்கால் நலவழித்துறை துணை இயக்குனர் டாக்டர். சிவராஜ்குமார் தொடங்கி வைத்தார் மேலும் அவர் கூறுகையில் ஒவ்வொரு வருடமும் ஜுன் 12 தேதி முதல் 24 ஆம் தேதிவரை இந்த தீவிர வயிற்றுப்போக்கு முகாம் நடைபெறும் என்றும் இம்முகாமில் வயிற்றுப்போக்கின் போது நீர்சத்து குறையும் போது கொடுக்கப்படும் ORS கரைசல் பாக்கெட்டும் சிங்க் மாத்திரையும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது பொதுமக்களுக்கு முறையாக கைகழுவுதல் முறையும் தன் சுகாதரத்தை பற்றியும் சுகாதர பணியாளர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்துவார்கள் என்றார்.

இம்முகாமில் சுகாதார திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர்.தேனாம்பிகை, நோய் தடுப்பு திட்ட தொழில்நுட்ப உதவியாளர் சீ.சேகர் கலந்துக்கொண்டு வயிற்று போக்கு வந்தால் என்ன செய்ய வேண்டும் என்ன செய்யக்கூடாது என்று விளக்கி கூறினர் இமுகாமினை கிராப்புர செவிலியர்கள் ஸ்டெல்லரா ணி,தூர்க்காம்பால்,தமிழரசி, செல்வி,சுகாதார உதவியாளர் சுதர்சனன் மற்றும் ஆஷா பணியாளர்கள் ஏற்பாடு செய்து அப்பகுதி மக்களுக்கு சுகாதார சேவையாற்றினர்



மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தலின் பேரில் காரைக்கால் மாவட்டம் முழுவதும் அனைத்து கொம்யூன் பஞ்சாயத்து அதிகாரிகளும் பல்வேறு இடங்களில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் உள்ளனவா என ஆய்வு செய்து வருகிறார்கள். இதன் ஒரு பகுதியாக நிரவி கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் இளமுருகன் தலைமையில் நிரவி பகுதிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளிளும் மற்றும் கல்வி நிலையங்கள் மற்றும் ஆலயங்கள் அருகில் உள்ள பல்வேறு கடைகளில் ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வில் 25 கிலோ மதிப்புள்ள தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் கடை உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது இதையும் மீறி தாங்கள் விற்றால் தங்கள் மீது வழக்கு தொடரப்படும் எனவும் ஆணையர் அறிவுறித்தினார். மேலும் 2400 ரூபாய் அபராதம் வசூலிக்கப்பட்டது. உடன் கொம்யூன் பஞ்சாயத்து ஊழியர்கள் இருந்தனர்



கோடை விடுமுறை முடிந்து 12 தேதி அன்று ஆறாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பள்ளிகள் திறக்க படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது இதனையடுத்து சென்னை திருவொற்றியூரில் ஜெயகோபால் கரோடியா அரசு மேல்நிலைப் பள்ளியில் பள்ளிக்கு வந்த மாணவ மாணவியர்கள் விடுமுறைக்கு பின்பு சந்தித்து மகிழ்ச்சியுடன் கட்டித்தழுவி அன்பை பரிமாறிக் கொண்டனர் இதனை அடுத்து திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கேபி சங்கர் தான் படித்த பள்ளியில் பள்ளி திறக்கப்பட்ட முதல் நாளில் பள்ளிக்கு வந்தார் அவரை பொறுப்பு தலைமை ஆசிரியர் பாலாஜி மற்றும் மாணவர்கள் பூ தூவி வரவேற்றனர். இதனையடுத்து மாணவர்கள் முன்னிலையில் தேசிய கொடியேற்றி ஏற்றினர் கோடை வெயிலில் தாக்கத்தினால் பள்ளிக்கு வந்த 1150 மாணவ மாணவியர்களை ஊக்கப்படுத்தவும் உற்சாகப்படுத்தும் வகையிலும் கே பி சங்கர் எம்எல்ஏ மற்றும் மாமன்ற உறுப்பினர் சொக்கலிங்கம் மாணவ மாணவிகளுக்கும் மற்றும் அவரது பெற்றோர்களுக்கு ஐஸ்கிரீம் வழங்கினார்



சென்னை மாதவரத்தில் மெட்ரோ ரயில் நிலையம் அமைய உள்ள இடத்திற்கு அருகே நூறாண்டுகள் பழமை வாய்ந்த மாந்தோப்பில் ஒரு ஏக்கர் நிலத்தில் இயற்கை வளத்துடன் கலையரங்கம் அமைக்கப்பட்டது காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினர் தேசிய மணி மற்றும் சந்திரசேகருக்கு சொந்தமான மாந்தோப்பில் அமைக்கப்பட்டுள்ள உசோதயா சூரிய பிரகாஷ் கார்டனை மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் சுதர்சனம் ரிப்பன் வெட்டி குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார் நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சி திருவெற்றியூர் ஒன்றாவது மண்டல குழு தலைவர் தனியரசு மணலி இரண்டாவது மண்டலக்குழு தலைவர் ஆறுமுகம் மாதவரம் மூன்றாவது மண்டல குழு தலைவர் நந்தகோபால் உள்ளிட்டோர் பங்கேற்றனர் நூறு ஆண்டுகளுக்கு முன்பு உள்ள பழமையான இடத்தில் மக்கள் பயன்பெறுவதற்காக சிறப்பான முறையில் நீர்வீழ்ச்சியுடன் கலையரங்கம் அமைக்கப்பட்டது காண்போரை வியப்படையசெய்தது

# திருக்கடையூர் அரசு பள்ளியில் மாணவர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்கும் நிகழ்ச்சி



தரங்கம்பாடி, ஜூன். 14-

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, திருக்கடையூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித்துறை சார்பில் விலை இல்லா நோட்டு புத்தகங்கள் வழங்கும் விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

விழாவிற்கு மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் பார்த்தசாரதி தலைமை வகித்தார். ஒன்றியக்குழுத் தலைவர் நந்தினி ஸ்ரீதர், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் துளசிரேகா ரமேஷ், தொடக்கக்கல்வி அலுவலர் சீனிவாசன், தரங்க பேரூரட்சி தலைவர் சுகுணசங்கரி குமரவேல், ஒன்றிய குழு துணை தலைவர் மைனர் பாஸ்கர், ஊராட்சி மன்ற தலைவர் ஜெயமாலதி சிவராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி தலைமை ஆசிரியர் ஞானப்பிரகாசம் வரவேற்று பேசினார்.

நிகழ்ச்சியில் பூம்புகார் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு 180 மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள் மற்றும் இனிப்புகள் வழங்கி துவக்கி வைத்து பேசினார். தொடர்ந்து மாணவ மாணவிகளின் பெற்றோர்களுக்கு மரக்கன்றுகளை வழங்கினார்.

இதில் தஞ்சை மண்டல திமுக தகவல் தொழில்நுட்ப அணி பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், மாவட்ட திமுக துணை செயளாலர் மு.ஞானவேலன், ஒன்றிய செயளாலர்கள் அமுர்த. விஜயகுமார், எம். அப்துல்மாலிக், தரங்கை பேரூர் திமுக செயளாலர் முத்துராஜா, ஒன்றிய குழு உறுப்பினர் சாந்தி வேல்முருகன், மாவட்ட திமுக பிரதிநிதி மணிமாறன், ஒன்றிய திமுக இளைஞரணி அமைப்பாளர் இரா. செந்தில், ஊராட்சி செயலர் வெங்கடேசன், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் பாக்கியா மற்றும் பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவ மாணவிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# சீர்காழி அருகே பழைய மணல் குவாரியில் தேங்கிய தண்ணீரில் நண்பர்களுடன் குளித்த சிறுவன் தண்ணீரில் மூழ்கி உயிரிழப்பு

பூம்புகார் போலீசார் உடலை கைப்பற்றி விசாரனை



சீர்காழி, ஜூன். 14-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுக்கா கீழப்பெரும்பள்ளம் கிராமத்தில் கடந்த 2021 ம் ஆண்டு தனியார் இடத்தை விலைக்கு வாங்கி குவாரி அமைத்து அதிலிருந்து மணல் எடுத்து நெடுஞ்சாலை விரிவாக்க பணிக்கு பயன்படுத்தி உள்ளனர்.

மண் எடுத்து முடித்த பிறகு அந்தப் பகுதிக்குள் வெளிநபர்கள் செல்லாதபடி கம்பி வேலி அமைத்து உள்ளனர்.

தற்போது மண் எடுக்கப்பட்ட பகுதியில் மழை நீர் தேங்கி குளம் போல காட்சி அளிக்கிறது. இந்நிலையில் வானகிரி ஏராம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி கிரிவாசன் மகன் கௌதம்(13) சீர்காழியில் உள்ள தனியார் பள்ளி ஒன்றில் 8ம் வகுப்பு படித்து வரும் இவர் நண்பர்களுடன் கம்பி வேலியை தாண்டி பழைய மணல் குவாரியில் குளம் போல் தேங்கி உள்ள தண்ணீரில் குளித்துள்ளார்.

அப்போது ஆழம் அதிகமாக இருந்ததால் கௌதம் தண்ணீரில் மூழ்கி உள்ளார். தகவல் அறிந்த பெற்றோர் மற்றும் உறவினர்கள் சென்று பார்த்தபோது கௌதம் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தது தெரிய வந்தது.

தகவல் அறிந்து வந்த பூம்புகார் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று கௌதம் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததுடன், வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டுள்ளார். இச்சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# துரியோதனன் படுகளம் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்பு தத்துரூபமாக நடித்துக் காட்டிய கூத்து கலைஞர்கள்



செங்கல்பட்டு,ஜூன்,14

செங்கல்பட்டு, மாவட்டம் மதுராந்தகம் அடுத்துள்ள நீலமங்கலம் கிராமத்தில், துரோபதி அம்மன் அக்னி பிரம்மச்வ விழாவானது கடந்த 25 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த ஆண்டு வெகு விமர்சையாக நடைபெற்றது.

திரெளபதி அம்மன் கோவில் அக்னி வசந்த விழாவை, முன்னிட்டு கடந்த மாதம் 24 ஆம் தேதி கொடி ஏற்றத்துடன் அக்னி வசந்த திருவிழா துவங்கியது. இதனை ஒட்டி தினமும் மகாபாரத சொற்பொழிவு நடைபெற்று வந்தது. மேலும் தினமும் கவி சொற்பொழிவு நடைபெற்று வந்தது

அதேபோன்று இந்த மாதம் ஒன்றாம் தேதி முதல் தினமும் இரவு மகாபாரத கூத்து நடைபெற்று வந்தது. ஏராளமான கிராம மக்கள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

விழாவில் முக்கிய அம்சமாக கருதப்படும், துரியோதனன் படுகளம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் புராண கதைகளில் வரும் அர்ஜுனன் பீமன் மற்றும் துரியோதனன் ஆகிய வேடங்களை அணிந்து வந்த கூத்து களஞ்சர்கள் வீதிகளில் கூத்தாடிக் கொண்டே, இதிகாச வரலாற்றை மக்கள் முன் நடித்துக் காட்டினர். இதனைத் தொடர்ந்து பீமன் வேடமிட்ட கூத்து கலைஞர், மிக பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டிருந்த துரியோதனன் பொம்மை மீது ஏறி அமர்ந்து தொடையில் பீமன் அடிப்பது போன்று, தத்துரூபமாக கலைஞர்கள் நடித்துக் காட்டினர். இந்த விழாவில் ஏராளமான பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து மாலை தீமிதி திருவிழாவும் நடைபெற உள்ளது.

# பெருவாயல் கிராமம் ஸ்ரீராதா ருக்மணி சமேத ஸ்ரீசந்தான கிருஷ்ண பெருமாள் திருக்கோவில் பஜனை மந்திரத்தின் மகா கும்பாபிஷேகம்




ஊத்துக்கோட்டை, ஜூன்14-

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், பெருவாயல் கிராமத்தில் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஸ்ரீராதா ருக்மணி சமேத ஸ்ரீசந்தான கிருஷ்ண பெருமாள் திருக்கோவில் பஜனை மந்திரம் உள்ளது.

இக்கோவில் சிதிலமடைந்து காணப்பட்டது. இந்நிலையில், பக்தர்கள்,விழா குழுவினர்கள், கிராம பொதுமக்கள் ஒன்று சேர்ந்து கோவிலை புதுப்பித்து நேற்று காலை மகா கும்பாபிஷேகம் செய்து வைத்தனர்.இதை முன்னிட்டு நேற்று முன் தினம் மாலை கலச ஸ்தாபனம்,கணபதி பூஜை, கணபதி ஹோமம் உள்ளிட்டவைகளுடன் மகா கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் துவங்கியது.நேற்று காலை விஸ்வரூபம்,கோ பூஜை,மகா பூர்ணாகுதி உள்ளிட்டவை நடைபெற்றது.

இதன் பின்னர், புனித நீர் அடங்கிய கலசங்களை பட்டாச்சாரியார்கள் ஊர்வலமாக கொண்டு வந்தனர்.காலை 10 மணிக்கு கோபுர கலசம் மற்றும் மூலவருக்கு புனித நீர் ஊற்றி மகா கும்பாபிஷேகம் செய்து வைத்தனர்.இதன் பின்னர்,மகா அலங்காரம்,மகாதீபாராதனை உள்ளிட்டவை நடைபெற்றது.

பின்னர், கோவில் அருகே பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜே. கோவிந்தராஜன்,பெருவாயல் ஊராட்சி மன்ற தலைவர் ராஜசேகர்,கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய இளைஞரணி திமுக அமைப்பாளர் சுரேஷ்,அதிமுக பொது குழு உறுப்பினர் ஆர்.அபிராமன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். இரவு பூக்களாலும், மின்விளக்குகலாலும் அலங்கரிக்கப்பட்ட பெருமாள் முக்கிய வீதிகளின் வழியாக திருவிதி உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இன்று முதல் 48 நாட்கள் மண்டலபிஷேக நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ஷியாம் தலைமையில் விழா குழுவினர்கள், பக்தர்கள்,கிராம பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# புதுக்கோட்டை நகராட்சி பள்ளி மாணவர்களுக்கு இலவச தட்டு வழங்கும் நிகழ்ச்சி



புதுக்கோட்டை, ஜூன்.14-

தமிழக முதல்வரின் காலை உணவு திட்டத்திற்காக புதுக்கோட்டை நகராட்சி பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இலவச தட்டு வழங்கும் நிகழ்ச்சி சங்கத் தலைவர் சிவக்குமார் தலைமையில் நகர்மன்றத்தில் நடைபெற்றது.

2023-24 ஆம் ஆண்டின் தலைவர் அசோகன் காலை உணவு திட்டத்தின் இலவச தட்டுகளை நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், துணைத் தலைவர் லியாகத் அலி, நகராட்சி ஆணையர்(பொ) சித்ரா விடம் வழங்கினார், உடன் புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்க முன்னாள் தலைவரும், குழிபிறை ஊராட்சி மன்றத் தலைவருமான அழகப்பன் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கத் தலைவர் கண.மோகன் ராஜா, பொறியாளர் கலியகுமார், ரோட்டரி சங்கச் செயலாளர் அரசகுமார், பொருளாளர் சங்கர், தங்க ராஜா, ராஜா, நேர்முக உதவியாளர் குமரவேல், நகர் மன்ற உறுப்பினர் ராஜா முகமது மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியம் அரவம்பட்டி ஊராட்சியில் நடைபெற்று வரும் அனைத்து திட்டப் பணிகள் ஆய்வு, உதவி திட்ட மண்டல அலுவலர் பழனிச்சாமி-யால் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின்போது கந்தர்வகோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் திலகவதி, அரவம்பட்டி ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் அருண் பிரசாத், பணி மேற்பார்வையாளர்கள் அழகர்சாமி, சிவக்குமார் ,துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், கிருஷ்ணமூர்த்தி, தமிழ்ச்செல்வி ஆகியோர் உடன் இருந்தனர்.

# காரைக்கால் வேளாண் கல்லூரி இந்திய அரசு அரிசி ஆராய்ச்சி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்



காரைக்கால், ஜுன்,14

பண்டிதஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும் ஹைதராபாத்தில் உள்ள இந்திய அரசு அரிசி ஆராய்ச்சி நிலையமும் ஓர் புதிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தை புதுவை வேளாண் அமைச்சர் தேனி ஜெயக்குமார் முன்னிலையில் கல்லூரி முதல்வர் முனைவர் ஏ.புஷ்பராஜ் , இந்திய ஆராய்ச்சி அரிசி ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குனர் முனைவர் சுந்தரம் இந்த புரிந்துணர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

பின்னர் இது குறித்து புதுவை வேளாண் அமைச்சர் தேனி ஜெயக்குமார் கூறுகையில் புதுவை அரசின் வேளாண்மை கல்லூரி ஆனது 1987 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு தற்சமயம் சுமார் 32 வருடங்கள் நிறைவடைந்த நிலையில் ஹைதராபாத்தில் உள்ள இந்திய வேளாண் இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஓர் அங்கமான இந்திய அரிசி ஆராய்ச்சி நிறுவனத்துடன் கல்வி மற்றும் ஆராய்ச்சிகளில் பரஸ்பர ஒத்துழைப்பு நல்கிட இந்த ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது.

இதில் முக்கியமாக மாணவர்கள் பட்டப் படிப்பு மற்றும் முனைவர் பட்ட மாணவர்களுக்கு வழிகாட்டுதல் ஆராய்ச்சி வசதிகளை பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளுதல் ஆகியவை முக்கிய கூறாக அமையும் என்று குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட புதுவை வேளான் அமைச்சர் தேனி ஜெயக்குமார் விஞ்ஞானிகளை நெல்லில் மகசூல் அதிகரிப்பு மற்றும் இயந்திர மயமாக்கல் ஆகியவற்றை முக்கிய அம்சங்களை ஆராய்ச்சிகளுக்குஎடுத்துக் கொள்ளும்படி கேட்டுக் கொண்டார்.

மேலும் மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் தயாரிக்கப்பட்ட அரிசியில் இருந்து தயாரிக்கப்பட்ட பல்வேறு மதிப்பு கூட்டப்பட்ட பொருள்களின் கணகாட்சியையும் விற்பனையையும் அமைச்சர் துவக்கி வைத்தார்.

இந்திய அரசு ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குனர் முனைவர் சுந்தரம், கல்லூரி முதல்வர் முனைவர் புஷ்பராஜ் புதுவை பெருந்தலைவர் காமராஜர் வேளாண் நிலையத்தில் அறிவியல் நிலையத்தில் தலைவர் த சிவசுப்பிரமணியம் வேளாண்விரிவாக்கத்துறை பேராசிரியர் முனைவர் பார்த்தசாரதி உடன் இருந்தனர்.

# தென்காசியில் மாபெரும் இலவச கண் பரிசோதனை முகாம்



தென்காசி,ஜூன்.14-

தென்காசி வடக்கு மாவட்டம் சார்பில் நாகர்கோவில் பெஜான்சிங் மருத்துவமனை மருத்துவ குழுவினர் மூலம் சங்கரன்கோவில் தெற்கு ஒன்றியம் வீரசிகாமணியில் வைத்து மாபெரும் இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது, முகாமிற்கு தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ தலைமை வகித்தார், சங்கரன்கோவில் தெற்கு ஒன்றியச் செயலாளர் லாலாசங்கரபாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து கண் சிகிச்சை முகாமை வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ துவக்கி வைத்தார், இதில் கண் சம்பந்தப்பட்ட அனைத்து பரிசோதனைகளும் செய்யப்பட்டது, தேவைப்படுபவர்களுக்கு இலவசமாக லென்ஸ், மருந்து, மாத்திரைகள் வழங்கப்பட்டது. இதில் தலைமை பொதுக்குழு உறுப்பினர் மாரிசாமி, நிர்வாகிகள் முருகையா, வைரமுத்து, வெள்ளைச்சாமி, வேலுத்தாய், முனியம்மாள் , முக்கையா, தர்மராஜ், சந்திரன், ஈஸ்வரன் ,சந்திரசேகர், ஹைதர்அலி, கடல்துரை, ராமகிருஷ்ணன், நடராஜன், பாஸ்கர், மதியழகன், பூக்குமார், கருப்பசாமி வீரபாண்டி, கணேசன், முருகன், கிருஷ்ணன், சண்முகையா, குருசாமி, அனுசியபாண்டியன், சுப்பையா, கருப்பசாமி மற்றும் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர், முடிவில் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் உதயகுமார் நன்றி கூறினார்.

# புதுக்கோட்டையில் குழந்தைத் தொழிலாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி




புதுக்கோட்டை, ஜூன்.14-

புதுக்கோட்டை ராஜகோபாலபுரம் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் மாவட்ட குழந்தைகள் நலக்குழுமம் சார்பாக குழந்தைத் தொழிலாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு பள்ளித் தலைமை ஆசிரியர் வி.விக்டோரியா தலைமை வகித்தார், குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பின் முக்கியத்துவம் குறித்து மாவட்ட குழந்தைகள் நலக்குழுமத் தலைவர் கே.சதாசிவம், நலக்குழும உறுப்பினர் எம்.சுவாமிநாதன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

விழிப்புணர்வு கலை நிகழ்ச்சியை வழங்கிய மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசு வழங்கி மாவட்டக் கல்வி அலுவலர் ரமேஷ், மாவட்டக் கல்வி ஆய்வாளர் குரு.மாரிமுத்து ஆகியோர் பாராட்டிப் பேசினர், நிகழ்ச்சியை பள்ளி ஆசிரியர் த.ரேவதி ஒருங்கிணைத்தார், நிகழ்வில் பள்ளி மாணவர்கள் ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

# புதுக்கோட்டை அசோக் நகர் பள்ளியில் புத்தகங்கள் வழங்கல்



புதுக்கோட்டை

புதுக்கோட்டை அசோக்நகர் நடுநிலைப்பள்ளி கோடை விடுமுறைக்குப் பின் தமிழக அரசு மற்றும் பள்ளிக் கல்வித்துறையின் வழிகாட்டுதலோடு திறக்கப்பட்டது. பள்ளிக்கு வருகை புரிந்த மாணவர்களை மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர், புதுக்கோட்டை வட்டார கல்வி அலுவலர் பிரியா, தலைமை ஆசிரியர் நிர்மலா, அறிவியல் ஆசிரியர் பழனிச்சாமி ஆகியோர் மலர் தூவி வரவேற்றனர்.

காலை வழிபாட்டு கூட்டத்தில் கொடியேற்றி வைத்து தமிழக அரசின் நலத்திட்டங்கள் பள்ளி பாதுகாப்பு வழிகாட்டுதல் நெறிமுறைகளை எடுத்துக் கூறி மாணவர்களுக்கு நோட்டுகள் மற்றும் புத்தகங்களை வழங்கினர். மேலும் தமிழக முதல்வர் மற்றும் பள்ளி கல்வித்துறை அமைச்சரின் வாழ்த்து செய்தியை மாணவர்களுக்கு படித்துக் காட்டப்பட்டது. தலைமையாசிரியர் நிர்மலா அனைவரையும் வரவேற்றார். பட்டதாரி ஆசிரியர் பழனிச்சாமி நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். ஆசிரியர் ஜீனத் நிஷா பேகம் நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை சமீம் ஆசிரியர் செய்திருந்தார். நிகழ்வில் பெற்றோர்கள், ஆசிரியர் கழக உறுப்பினர்கள், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், சத்துணவு பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். நிறைவாக மாணவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

# புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா மெட்ரிக் பள்ளியில் மேல்நிலை முதலாம் ஆண்டு துவக்கவிழா



புதுக்கோட்டை,ஜூன்.14-

புதுக்கோட்டை திருக்கோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான முதல் நாள் வகுப்புகள் தொடக்க விழா நடைபெற்றது, இந்த விழாவிற்கு பள்ளியின் முதல்வர் கவிஞர் தங்கம்மூர்த்தி தலைமையேற்றார். குத்துவிளக்கு ஏற்றும் நிகழ்வில் புதுமையாய் பத்தாம் வகுப்பு மாணவர்களின் பெற்றோர்கள் சண்முகப்பிரியா, அனுஷியா பேகம், நாகலெட்சுமி ஆகியோர் குத்துவிளக்கேற்றி நிகழ்வை தொடங்கி வைத்தனர்.


புதியதாக பள்ளிக்கு வந்த மாணவர்களை ஆசிரியர்களோடு சேர்ந்து மாணவர்களும் ரோஜா மலர்கள் கொடுத்து வரவேற்றனர், முதல் நாள் வகுப்பிற்கு வந்துள்ள மேல்நிலை முதலாமாண்டு மாணவர்களை பள்ளியின் ஆலோசகர் அஞ்சலிதேவி தங்கம்மூர்த்தி, மேலாண்மை இயக்குனர் நிவேதிதா மூர்த்தி, பள்ளியின் சிஇஓ காவியா மூர்த்தி மற்றும் பேராசிரியர் அபிராமிகருப்பையா ஆகியோர் வாழ்த்திப்பேசினர், சிறப்பு விருந்திரனாக ஆசிரியர் மனசு திட்ட ஒருங்கிணைப்பாளர் சிகரம், சதீஷ்குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விழாவில் பள்ளியின் துணை முதல்வர் குமாரவேல், ஒருங்கிணைப்பாளர்கள் கௌரி, அபிராமசுந்தரி, வரலெட்சுமி மற்றும் மேல்நிலை வகுப்பு ஆசிரியர்கள் கமல்ராஜ், துர்காதேவி, ஜெயசுதா,தனம் பாலமுருகன், பால்ராஜ், சின்னையா, சத்தியராஜ், ஆறுமுகம்,மேலாளர்ராஜா மற்றும் திரளான ஆசிரியப்பெருமக்கள் கலந்துகொண்டு மாணவர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தனர், முன்னதாக ஆசிரியர் கனியன் செல்வராஜ் வரவேற்க நிறைவாக அபிராமசுந்தரி நன்றி கூறினார், விழாவினை ஆசிரியர் உதயகுமார் தொகுத்து வழங்கினார்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் அருகே தீயத்தூரில் அமைந்துள்ள சகஸ்ர லட்சுமீஸ்வரர் கோயிலில் மாதந்தோறும் உத்திரட்டாதி நட்சத்திர நாளில் ருத்ரஹோமம் நடைபெற்றது. தொடர்ந்து சகஸ்ரலட்சுமீஸ்வரர் வாஞ்சாகணபதி, வள்ளி தேவசேனா சமேத சுப்ரமணியர், சூரியன், சந்திரன், லிங்கோத்பவர், தட்சிணாமூர்த்தி, பிரம்மா, பைரவர் ஆகிய சுவாமிகளுக்கு பால், தயிர், சந்தனம், தேன், இளநீர்,சிறப்பு அபிஷேகம் ஹோமத்தில் வைத்து பூஜிக் கப்பட்ட புனித கலச நீரால் சகஸ்ரலட்சுமீஸ்வரர் மற்றும் அம்பாளுக்கு அபிஷேகம், கணேஷ் குருக்கள் தலைமையில் நடைபெற்றது . சகஸ்ரலட்சுமீஸ்வரர் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தனர், இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர், சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது

# உளுந்தூர்பேட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்கப்பட்டன



கள்ளக்குறிச்சி, ஜுன்,14_

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை நகராட்சியில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் கோடை விடுமுறை முடிந்து 6-ஆம் வகுப்பு முதல் 12-ஆம் வகுப்பு வரை உள்ள அனைத்து மாணவர்களையும் பள்ளி இருபால் ஆசிரியர்களும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். இதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசு வழங்கும் இலவச பாடபுத்தகம் பாட நோட்டுகள் மற்றும் சீருடைகள் தலைமையாசிரியர் கோவிந்தன், உதவி தலைமையாசிரியர் மோகன்ராம் ஆகியோர் முன்னிலையில் வழங்கப்பட்டது

இந்நிகழ்ச்சியில் இருபால் ஆசிரியர்கள் பிரேமா, சங்கர், பாண்டியன், கிருஷ்ணமூர்த்தி, ராஜவேல், முத்துகுமரன், மணிகண்டன், ரமேஷ், ராஜலட்சுமி, ரிஹானாபானு, மாதுரி, கோவிந்தராஜ், ஞானவேல், கந்தசாமி, ஓவிய ஆசிரியர் கோபால், உடற்கல்வி ஆசிரியர் சிவ. ஈஸ்வரன்உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ஆலங்குடி அரசு மருத்துவமனையில் திடீர் தீ விபத்து



ஆலங்குடி,ஜூன்.14-

ஆலங்குடி அரசு மருத்துவமனையில் உள்ள ஐ சி யூ வார்டில் உயர் மின்னழுத்தம் காரணமாக திடீரென தீ பிடித்தது. அங்கிருந்த மருத்துவமனை ஊழியர்கள் சிகிச்சைக்காக இருந்த இரண்டு நோயாளிகளை உடனடியாக அப்புறப்படுத்தி தீயை அணைத்ததால் பெரும் பாதிப்புதவிர்க்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அரசு மருத்துவமனையில் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் முயற்சியால் சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் ஐ சி யூ வார்டு அமைக்கப்பட்டது. இதனால் மாரடைப்பு போன்ற அவசர நோய்களுக்கு சிகிச்சை அளிக்க ஏதுவாக இருந்தது. இந்நிலையில் ஐசியூ வார்டில் மின்சாரம் சீராக இல்லை என்றும் அதனை சீரமைத்து தருமாறும் மருத்துவமனை நிர்வாகம் பலமுறை மின்சார வாரியத்தில் புகார் கொடுத்துள்ளதாக கூறப்படுகிறது, ஆனால் முறையான பராமரிப்பு இல்லாததால் திடீரென ஐ சி யூ வார்டில் உயர் மின்னழுத்தம் காரணமாக தீப்பிடித்தது. இதனால் அதிர்ச்சடைந்த மருத்துவமனை ஊழியர்கள் சிகிச்சைக்காக அங்குஇருந்த இரண்டு நோயாளிகளை உடனடியாக அப்புறப்படுத்தினர்.

மேலும் தீவிரமாக செயல்பட்டு உடனடியாக தீயை அணைத்தனர். இதனால் பெரும் பாதிப்பு தவிர்க்கப்பட்டது. இருப்பினும் மானிட்டர் போன்ற சில கருவிகள் தீயில் சேதமடைந்தது. இந்த ஐசியூ வார்டு அமைந்துள்ள பகுதியில் டயாலிசிஸ் மெஷின் அமைக்க முயற்சிகள் நடந்து வரும் நிலையில் உயர் மின்னழுத்தம் காரணமாக மருத்துவமனையில் தீப்பிடித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே உயிருக்கு போராடும் பொதுமக்கள் சிகிச்சை பெற்று வரும் மருத்துவமனையில் முறையான மின்சாரம் கிடைக்க சம்பந்தப்பட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஜெயங்கொண்டம் பகுதியில் பல்வேறு வளர்ச்சி பணிகளை சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் தொடக்கி வைத்தார்



அரியலூர், ஜூன். 14-

ஜெயங்கொண்டம் பகுதியில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் தொடங்கி வைத்தார்.

அரியலூர் மாவட்டம் , ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், முத்துசேர்வாமடம் ஊராட்சி, சுண்டிப்பள்ளம் புது காலனியில், ரூபாய் 6.00 லட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கும் பணி, குண்டவெளி ஊராட்சி, மீன்சுருட்டி ரெஜிஸ்டர் ஆபீஸ் எதிரில் உள்ள சாலையை ரூபாய் 6.00 லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலையாக அமைக்கும் பணி, ரூபாய் 21 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள, மீன்சுருட்டி வருவாய் ஆய்வாளர் குடியிருப்பு மற்றும் அலுவலகம் கட்டிடத்தை திறந்து வைத்தல், மீன்சுருட்டி துணை வேளாண்மை விரிவாக்க மையக் கட்டிடம் ரூபாய் 36.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டிடம் திறந்து வைத்தல், ஆலத்திப்பள்ளம் ஊராட்சியில், திருச்சி (நெ) நபார்டு மற்றும் கிராம சாலை திட்டத்தின் கீழ், ஆலத்திப்பள்ளம் முதல் ஒடப்பேரி-சொக்கலிங்கபுரம் வரை செல்லும் சாலை ரூபாய் 174.83 லட்சம் மதிப்பீட்டில் தரம் உயர்த்துதல், ஆகியவற்றை சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் உதவி கோட்ட பொறியாளர் சரவணன்(நபார்டு மற்றும் கிராம சாலைகள்) ,உதவி பொறியாளர் ராஜா, வேளாண்மை செயற்பொறியாளர் எஸ். குமரகணேஷ், வேளாண்மை உதவி செயற்பொறியாளர் அசோகன், உதவி வேளாண் இயக்குனர் சுப்பிரமணியன், உதவி பொறியாளர் (பொ.ப.து) ஜெயந்தி, வருவாய் மண்டல துணை வட்டாட்சியர் சரவணன், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவசங்கர், சண்முகம், வருவாய் ஆய்வாளர் ரமேஷ்குமார், குண்டவெளி கிராம நிர்வாக அலுவலர் புகழேந்தி. திமுக ஜெயங்கொண்டம் வடக்கு ஒன்றிய செயலாளர் தன.சேகர், ஜெயங்கொண்டம் தெற்கு ஒன்றிய செயலாளர் இரா.மணிமாறன், பொதுக்குழு உறுப்பினர் சி.ஆர்.எம்.பொய்யாமொழி, மாவட்ட விவசாய அணித் தலைவர் பி.ஆர். கண்ணன், குண்டவெளி ஊராட்சிமன்றத் தலைவர் ஜெயந்தி தெய்வமணி, ஆலத்திப்பள்ளம் ஊராட்சி மன்றத் தலைவர் குணசேகரன், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் எம். ஜி.ராஜேந்திரன், மாவட்ட பிரதிநிதி, எஸ்.கே.பி.சங்கரன், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் பாலமுருகன் மற்றும் திமுக நிர்வாகிகள், கிளை செயலாளர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# அரியலூர் மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில் ஜமாபந்தி தொடங்கியது



அரியலூர், ஜூன்.14-

அரியலூரில் வருவாய் தீர்வாயம் எனப்படும் ஜமாபந்தி தொடக்கியது.

அரியலூர் மாவட்டத்துக்கு உட்பட்ட, அரியலூர், உடையார்பாளையம், ஆண்டிமடம், செத்துறை உள்ளிட்ட நான்கு வருவாய் வட்டங்களிலும், ஜமாபந்தி துவங்கி உள்ளது.

அரியலூர் தாலுகா அலுவலகத்தில், நேற்று நடைபெற்ற அரியலூர் பிர்காவுக்கு உட்பட்ட, வருவாய் கிராமங்களுக்கு ஜமாபந்தி எனப்படும், வருவாய் தீர்வாயம் நடத்தப்பட்டது. அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன் முன்னின்று நடத்திய இந்த ஜமாபந்தியில், அரியலூர் தாசில்தார் கண்ணன், வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் ஸ்ரீதர், உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். பொதுமக்கள் தரப்பில் கொடுக்கப்பட்ட பட்டா மாற்றம், உள்ளிட்ட மனுக்களை, வருவாய் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில், அரியலூர் வருவாய் ஆய்வாளர் முருகன், அரியலூர் பிர்காவுக்கு உட்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் பொட்டவெளி ஷாலினி, இலுப்பையூர் செல்வகணபதி, ராயபுரம் வேல்முருகன், சென்னிவனம் அனுஷா தேவி, கோவிந்தபுரம் செங்கமலை, ஓட்ட கோவில் முருகேசன், அமீனாபாத் சிவசக்தி, அரியலூர் வடக்கு ராஜகுமார், அரியலூர் தெற்கு நந்தகுமார் வாலாஜா நகரம் கனகராஜ், கயர்லாபாத் உமாசங்கர், கல்லங்குறிச்சி சாந்தி, கடுகூர் வசந்த், அயன் ஆத்தூர் இளங்கோவன், பெரியநாகலூர் மீனாம்பாள், தேளூர் ராஜு, காவனூர் பரமசிவம், விளாங்குடி ராஜேஸ்வரி, மற்றும் கிராம உதவியாளர்கள், சம்பந்தப்பட்ட வருவாய் கிராமங்களின் பொதுமக்கள் உட்பட, பலர் கலந்து கொண்டனர்.

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டத்தில் உள்ள உடையார்பாளையம் தாலுகா அலுவலகத்தில் அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆனி மேரி ஸ்வர்னா, ஆண்டிமடம் தாலுக்கா அலுவலகத்தில் மாவட்ட வழங்கல் அலுவலர் ரவிச்சந்திரன், செந்துறை தாலுகா அலுவலகத்தில் உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், ஆகியோர் தலைமையில் ஜமாபந்தி துவங்கியுள்ளது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

# “தலைமைச் செயலகத்தில் செந்தில்பாலாஜி அறையில் சோதனை முதல்வர் ஸ்டாலின் காட்டம்



சென்னை , ஜூன்.14

"தலைமைச் செயலகத்தில் அமைச்சர் செந்தில்பாலாஜியின் அறைக்குச் சென்று தேடுதல் நடத்தவேண்டிய தேவை என்ன ஏற்பட்டது என்று தெரியவில்லை. தலைமைச் செயலகத்திலும் ரெய்டு நடத்துவோம் என்று காட்டவோ அல்லது அதனைக் காட்டி மிரட்டவோ விரும்புகிறார்களா எனத் தெரியவில்லை" என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது தொடர்பாக திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கை: "தன்வசம் இருக்கும் விசாரணை அதிகார அமைப்புகள் மூலமாகத்தனக்குஎதிரான அரசியல் சக்திகளை பாஜக பழிவாங்கும். அவர்களுக்குத் தெரிந்த ஒரே வழி இது மட்டும்தான் என்று நான் ஏற்கெனவே சொல்லி இருந்தேன். இதற்கு இந்திய அளவில் எத்தனையோ எடுத்துக்காட்டுகள் சமீப காலங்களில் பல்வேறு மாநிலங்களில் நடந்துள்ளன.

இந்த நிலையில் அமைச்சர் செந்தில்பாலாஜியின் இல்லத்தில் இன்று காலை முதல் (நேற்று) அமலாக்கத் துறையினர் விசாரணை நடத்தி வருகிறார்கள். 'சோதனைக்கு முழு ஒத்துழைப்புகொடுப்போம், எந்தச் சோதனையாக இருந்தாலும் ஒத்துழைப்பு தருவேன், ஆவணங்கள் கைப்பற்றப்பட்டாலும் அதற்கு உரிய விளக்கம் அளிக்கத் தயார்' என்று அமைச்சர் செந்தில்பாலாஜியே பேட்டியும் அளித்துள்ளார். விசாரணை நடைபெறும் இடத்தில் இருந்து முழு ஒத்துழைப்பைத் தந்து வருகிறார்.

இந்த நிலையில், தலைமைச் செயலகத்தில் அமைச்சரது அறைக்குச் சென்று தேடுதல் நடத்த வேண்டிய தேவை என்ன ஏற்பட்டது என்று தெரியவில்லை. தலைமைச் செயலகத்திலும் ரெய்டு நடத்துவோம் என்று காட்டவோ அல்லது அதனைக் காட்டி மிரட்டவோ விரும்புகிறார்களா எனத் தெரியவில்லை. இவை எல்லாம் விசாரணை அமைப்பானது அரசியல் உள்நோக்கத்துடன் செயல்படுவதையே எடுத்துக் காட்டுகிறது.

ஒன்றிய உள்துறை அமைச்சர் இரண்டு நாட்களுக்கு முன் தமிழ்நாட்டுக்கு வந்து சென்ற நிலையில் உடனடியாக இதுபோன்ற காரியங்கள் நடக்கிறது என்றால் என்ன பொருள்? பொதுமேடைகளில் திமுகவையும் ஆட்சியையும் கடுமையாக விமர்சித்துச் சென்றார் ஒன்றிய அமைச்சர். அதற்குத் தகுந்த விளக்கத்தை நாங்கள் கொடுத்துவிட்டோம். ஆனால் இதுபோன்ற அமலாக்கத்துறை தாக்குதல்களைத் தலைமைச் செயலகத்தின் மீதே தொடுப்பது கூட்டாட்சித் தத்துவத்துக்கே களங்கம் ஏற்படுத்துவது ஆகும்.

ஒரு மாநில அரசின் மாண்புகாக்கும்தலைமைச் செயலகத்துக்குள் மத்திய காவல் படையை அழைத்து வந்து அதிகாரிகள் சோதனை நடத்துவதுதான் அரசியல் சட்ட மாண்பைக் காப்பதா?

கடந்த அதிமுக ஆட்சியில், 2016ம் ஆண்டு அன்றைய தலைமைச் செயலாளராக இருந்த ராம்மோகன்ராவ் வீட்டிலும், தலைமைச் செயலகத்திலும் வருமான வரித்துறை ரெய்டு நடத்தியது. “தலைமைச் செயலகம் என்பது மாநில அரசின் மூளை போன்ற முக்கியப் பகுதி. கூட்டுறவு - கூட்டாட்சி பேசிக் கொண்டே அந்த தலைமைச் செயலகத்தில் மத்திய போலீஸ் படையை அனுப்பி, தலைமைச் செயலாளராக இருந்த ராமமோகன்ராவ் அலுவலகத்துக்குள்ளேயே ரெய்டு நடத்துமாறு வருமான வரித்துறையை இயக்கியது ஒன்றிய அரசு. இது மாநில சுயாட்சிக் கொள்கைக்கு எதிரானது" என்று அன்றைய ஆட்சியாளர்கள் கண்டிக்காமலும் கண்டுகொள்ளாமலும் இருந்தபோது, அதனைக் கண்டித்து நான் அறிக்கை வெளியிட்டேன்.

எனவே, யாருக்கு நடந்தது என்பதல்ல முக்கியம். எங்கு நடத்தப்பட்டது என்பதே முக்கியம். மிகத்தவறான முன்னுதாரணங்களைத் தொடர்ந்து பாஜக உருவாக்கி வருகிறது.

பாஜகவின் மிரட்டல் அரசியலை நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அரசியல்ரீதியாக எதிர்கொள்ள முடியாதவர்களை, இதுபோன்ற புறவாசல் வழியாக அச்சுறுத்தப் பார்க்கும் அரசியல் செல்லுபடியாகாது என்பதை பாஜக தலைமை உணர வேண்டும். அதனை அவர்களே உணரும் காலம் நெருங்கிக் கொண்டுதான் இருக்கிறது” என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

# ட்விட்டர் நிறுவன முன்னாள் சிஇஓ–வின் குற்றச்சாட்டு பொய்யானது மத்திய அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர்




புதுடெல்லி , ஜூன்.14

டெல்லியில் விவசாயிகள் நடத்திய போராட்டத்தின்போது ட்விட்டருக்கு இந்திய அரசு அழுத்தம் கொடுத்ததாக அதன் முன்னாள் சிஇஓ ஜேக் டார்ஸி கூறி இருப்பது உண்மையல்ல என்றும், ட்விட்டர் இந்திய சட்டங்களை மீறி இருப்பதாகவும் மத்திய மின்னணு மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: "ட்விட்டர் நிறுவனத்திற்கு மத்திய அரசு அழுத்தம் கொடுத்ததாக ஜேக் டார்ஸி கூறியிருப்பது உண்மையல்ல. என்ன காரணத்திற்காக அவர் இவ்வாறு கூறி இருந்தாலும் அது கற்பனையானதே. இந்தியாவில் இயங்கும் எந்த ஒரு சமூக ஊடக நிறுவனமும் அது உள்நாட்டு நிறுவனமோ அல்லது வெளிநாட்டு நிறுவனமோ, சிறிய நிறுவனமோ பெரிய நிறுவனமோ அவை இந்திய சட்டங்களை மதித்து நடக்க வேண்டும் என்பதில் மத்திய அரசு தொடர்ந்து உறுதியாக இருக்கிறது. இந்திய குடிமக்களிடம் நீங்கள் ஒரு பொருளை விற்கிறீர்கள் எனும்போது இந்திய சட்டத்தை கடைப்பிடிப்பது கட்டாயம்.

கடந்த 2 ஆண்டுகளாக ட்விட்டர் என்ன செய்து கொண்டிருக்கிறது என்பதை மக்கள் அறிந்தே இருக்கிறார்கள். ட்விட்டர் தனது சமூக ஊடக தளத்தை தவறாகப் பயன்படுத்துகிறது. சிலரது குரலை ஒடுக்குகிறது; சிலரது சமூக ஊடகக் கணக்குகளை முடக்குகிறது. இந்தியாவில் மட்டுமல்ல வெளிநாடுகளிலும் இதுபோன்ற செயல்களில் ட்விட்டர் ஈடுபட்டுள்ளது. ஜேக் டார்ஸியின் தாக்குதல் என்னை அதிருப்தி அடையச் செய்துள்ளது. அவர் உண்மைக்கு மாறாக பேசி இருக்கிறார். அவர் பேசி இருப்பது பொய்யானது; தவறானது. இந்திய அரசியல் சாசனம் குடிமக்களுக்கு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் சட்டப்பிரிவுகளான 14, 19, 21 ஆகியவற்றை ட்விட்டர் மீறி உள்ளது. ட்விட்டராக இருந்தாலும் வேறு எந்த சமூக வலைதளங்களாக இருந்தாலும் அவை இந்தியர்களின் அடிப்படை உரிமைகளுக்கு எதிராக செயல்படக்கூடாது. இந்திய சட்டங்களை மீறக்கூடாது." இவ்வாறு ராஜீவ் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

# கந்தர்வகோட்டையில் பாஜக வர்த்தக பிரிவு புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம்



கந்தர்வகோட்டை, ஜூன்.14–

நிகழ்ச்சியில் மாவட்ட வர்த்தக பிரிவுத் தலைவர் பிரசாத் மற்றும் சிறப்பு விருந்தினர் மாநில துணைத்தலைவர் வீரன் சுப்பையா, மாவட்ட துணை தலைவர் பாண்டித்துரை, மாவட்ட செயலாளர் அய்யா இளங்கோ,ஒன்றிய தலைவர் சுரேஷ்,ஒன்றிய துணை தலைவர் கார்த்திக், ஒன்றியத் தலைவர் தவமணி, மாவட்டச் செயலாளர் கங்காதரன், மாநில பொதுக்குழு உறுப்பினர் சந்திரன், கார்த்திக், கமல கண்ணன், மகேஷ், முருகேசன், ராஜ்குமார் மற்றும் கந்தர்வகோட்டை ஒன்றிய நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர்கள் சாதாரண கூட்டம்






செம்பனார்கோயில், ஜூன்.14

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றியக்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஒன்றியக்குழு தலைவர் நந்தினி ஸ்ரீதர் தலைமை தாங்கினார். ஒன்றியக்குழு துணை தலைவர் மைனர் பாஸ்கரன், ஒன்றிய ஆணையர் மீனா, வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்) விஜயலட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய மேலாளர் கோவிந்தராஜ் வரவேற்றார்.

கூட்டத்தில் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பேசியதாவது:-

தேவிகா: இலுப்பூர் சிவன் கோயில் குளத்தை தூர்வாரி படித்துறை மற்றும் அந்த பகுதியில் கழிவறை அமைத்து தர வேண்டும். ஹரிஹரன் கூடல்பெருமாள்கோயில் குளத்தில் படித்துறை அமைக்க வேண்டும். ஹரிஹரன்கூடல்நடுநிலை பள்ளி வகுப்பறையின் மேற்கூரையை சீரமைக்க வேண்டும். எரவாஞ்சேரி- இலுப்பூர் இடையே மாரியம்மன் கோயில் அருகே சாலை சீரமைக்க வேண்டும்.

லெனின்தாஸ்: டி.மணல்மேடு அரசு பள்ளி எதிரே ஆபத்தான வகையில் திறந்து கிடக்கும் மழைநீர் வடிகாலில் மேல் மூடி அமைக்க வேண்டும்.

கிருஷ்ணன்: பரசலூர் ஊராட்சி திருவள்ளுவர் தெரு, நக்கீரர் தெரு அண்ணாமலை நகர் உள்ளிட்ட பகுதிகளில் சாலை அமைத்து தர வேண்டும். இதேபோல் மேலக்கட்டளை கலைஞர் நகர் இடையே சாலை அமைக்க வேண்டும். பரசலூர் ஊராட்சியில் பாரதப் பிரதமர் குடியிருப்பு திட்டத்தின் கீழ் 2001-2002 ஆம் ஆண்டு பணிகள் தொடங்கப்பட்ட 6 வீடுகள் முழுமை பெறாமல் உள்ளது. இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மைதிலி மகேந்திரன்: மேமாத்தூர் பஸ் நிறுத்த கட்டிடத்தை சீரமைத்து தர வேண்டும். வாழ்க்கை கிராமத்தில் மினி குடிநீர் தொட்டியை புதிதாக அமைத்து தர வேண்டும்.

ஜெயந்தி: திருவிடைக்கழி- தில்லையாடி இடையே பூச்சாத்தனூர் என்ற இடத்தில் சேதமடைந்த பாலத்தை புதிதாக கட்டித் தர வேண்டும்.

இதனை தொடர்ந்து ஒன்றியக்குழு தலைவர் பேசுகையில், தமிழ்நாடு முதலமைச்சரின் சிறப்பு திட்டத்தின் கீழ் செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பல்வேறு ஊராட்சிகளில் புதிதாக சாலை அமைக்க நிதி ஒதுக்கப்பட்டு பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது என்று கூறினார். கூட்டத்தில் சுகாதார துறையினர்ஈ உள்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# காரைக்கால், நிரவி கேந்திரிய வித்யாலயாவில் அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணியல்” குறித்த இணைய வழி பயிலரங்கம்



காரைக்கால் , ஜூன்.14

காரைக்கால், நிரவி கேந்திரிய வித்யாலயா ஜி -20 ஜன்பகிதாரி நிகழ்வுகளின் ஒரு பகுதியாக, “அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணியல்” (FLN) குறித்த இணைய வழி பயிலரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது.

FLN என்பது குழந்தைகளின் எளிய வாக்கியங்களை அர்த்தத்துடன் படித்து, 3 ஆம் வகுப்பு முடிவதற்குள் அடிப்படைக் கணிதப் பிரச்சனைகளைத் தீர்க்கும் திறனைக் குறிக்கிறது. பல்வேறு அரசு மற்றும் தனியார் பள்ளிகளைச் சேர்ந்த 100 க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இந்த பயிற்சி பட்டறையில் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சி கேந்திரிய வித்யாலயா பள்ளி வளாகத்தில் காலை 10.00 மணிக்கு தொடங்கியது. விழாவை காரைக்கால் துணை மாவட்ட ஆட்சியர் பாஸ்கரன் தொடங்கி வைத்தார்.

கேந்திரிய வித்யாலயா முதல்வர் பி ஸ்ரீராமன் குத்துவிளக்கேற்றி வரவேற்றுப் பேசினார், மேலும் ஜி -20 அடிப்படை எழுத்தறிவு மற்றும் எண்ணியல் (FLN) மற்றும் தேசிய கல்விக் கொள்கை 2020 (NEP 2020) இன் முக்கியத்துவம் குறித்தும் விளக்கினார். பள்ளி மாணவர்களின் பிரார்த்தனை பாடலுடன் நிகழ்ச்சி தொடங்கியது. பெருந்தலைவர் காமராஜர் கல்வியியல் கல்லூரியின் உதவிப் பேராசிரியர்கள் மோகனகுமாரமங்கலம் மற்றும் டாக்டர் பிஜு வர்கீஸ் ஆகியோர் பயிலரங்கிற்கு சிறப்பு விரிவுரையாளர்களாகக் கலந்துகொண்டனர்.

பயிலரங்கம் நான்கு அமர்வுகளாகப் பிரிக்கப்பட்டது. முதல் அமர்வை மோகனகுமாரமங்கலம் நடத்தினார், அவர் அடித்தள எழுத்தறிவு பற்றிய முக்கிய கருத்துக்களை அறிமுகப்படுத்தினார் மற்றும் இரண்டாவது அமர்வை டாக்டர் பிஜுவர்கீஸ் அடித்தள எண்கள் குறித்து பயிற்றுவித்தார் தேசிய கல்விக் கொள்கை 2020 குறித்த மூன்றாவது மற்றும் நான்காவது அமர்வுகள், கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்முறையின் முக்கியத்துவம் மற்றும் டிஜிட்டல் தொழிற்நுட்ப வளர்ச்சி பற்றி விவாதம் செய்வதாக அமைந்தது.

நிகழ்வின் ஒரு பகுதியாக கிருஷ்ணபிரசாத், முதல்வர் பெருந்தலைவர் காமராஜர் கல்வியியல் கல்லூரி, காரைக்கால் மற்றும் ஆசிரியை எலிசா காவேரி பப்ளிக் பள்ளி நிரவி ஆகியோர் பயிற்சி பட்டறையை பற்றிய கருத்துரை வழங்கினார்கள். பயிலரங்கின் முடிவில் கேந்திரிய வித்யாலயா பள்ளி காரைக்கால் சார்பாக ஆசிரியை ரேணுகாதேவி நன்றியுரை ஆற்றினார்.

மயிலாடுதுறை அருகே டாஸ்மார்க் மதுபானம் அருந்தியதால் இருவர் உயிரிழந்த விவகாரம்

# இறந்த பழனி, குருநாதனின் அண்ணன்கள் இருவரை சந்தேகத்தின் பெயரில் காவல் நிலையம் அழைத்துச் சென்று போலீசார் விசாரணை







▶ பழனி குருநாதன் ▶ பூராசாமி

மயிலாடுதுறை, ஜூன்,14

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் தாலுக்கா பெரம்பூர் காவல்சரகத்திற்கு உட்பட்ட மங்கநல்லூரை அடுத்த தத்தங்குடி கிராமத்தில் பூராசாமி மற்றும் பழனி குருநாதன் ஆகிய இரண்டுபேர் டாஸ்மார்க் மதுபானம் அருந்தி உயிரிழந்ததாக உறவினர்கள் குற்றம் சாட்டிய நிலையில் நேற்று முன் தினம் உயிரிழந்த இருவரின் உடல்கள் பிரேத பரிசோதனைக்காக திருவாரூர் கொண்டு செல்லப்பட்டது.

பழனி குருநாதன் ,பூராசாமி ஆகியோர் இறந்து கிடந்த இடத்தில் கைப்பற்றப்பட்ட டாஸ்மார்க் மது பாட்டில்களை தடய அறிவியல் மருத்துவ நிபுணர் குழு சோதனை செய்தது. இதில் மது பாட்டிலில் சயனைடு விஷம் கலக்கப்பட்டதாக மாவட்ட ஆட்சியர் மகாபாரதி தெரிவித்து இருந்தார். ஏற்கனவே சந்தேக மரணம் என்று காவல்துறையினர் வழக்கு பதிவு செய்திருந்தனர். மாவட்ட ஆட்சியர் தவறான தகவலை பதிவிடுவதாகவும், இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தமிழக அரசு தான் பொறுப்பேற்று பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று கூறி மங்கை நல்லூர் பகுதியில் இறந்த பழனி குருநாதன் வீட்டின் அருகே உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். மாவட்ட ஆட்சியர் பொய்யான செய்தியை பரப்புவதாக முழக்கமிட்டனர்.

இதனால் மயிலாடுதுறை டு திருவாரூர் சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. மயிலாடுதுறை டிஎஸ்பி சஞ்சீவ்குமார் தலைமையில் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தினர்.

தொடர்ந்து சாலை மறியலை கைவிட்டு போராட்டத்தை தொடர்ந்து வந்தனர். மாவட்ட ஆட்சியருக்கு எதிராக பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தொடர்ந்து மயிலாடுதுறை கோட்டாட்சியர் யுரேகா போராட்டம் நடத்தியவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். இதனிடையே முன்னதாக டாஸ்மார்க் மதுபானத்தால் உயிரிழந்ததாக குற்றம் சாட்டியுள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கழனிவாசல் பகுதியில் மதுபானம் வாங்கிய டாஸ்மாக் கடையில் இருந்த 400 மது பாட்டில்களை பெரம்பூர் காவல்துறையினர் கைப்பற்றி காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர். அங்கிருந்த 13 பாட்டில்களை டாஸ்மார்க் நிறுவன அதிகாரிகள் சென்னைக்கு ஆய்வுக்காக அனுப்பி வைத்துள்ளனர். தொடர்ந்து மதுபான கடை மேற்பார்வையாளர் ரமேஷிடம் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இரண்டு டாஸ்மார்க் கடைகள் பூட்டப்பட்டுள்ளன.

தற்போது மயிலாடுதுறை கோட்டாட்சியர் யுரேகா விசாரணை அதிகாரி மயிலாடுதுறை டிஎஸ்பி சஞ்சீவ் குமார் பேச்சுவார்த்தை நடத்தியதில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா முருகன் தனது சொந்த நிதியில் இருவரது குடும்பத்திற்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து பிரேத பரிசோதனை அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற உத்தரவாதத்தின் பெயரில் போராட்டம் விளக்கிக் கொள்ளப்பட்டது. இருவரது உடல்களும் வீட்டிற்கு கொண்டுவரப்பட்டு இறுதி காரியம் செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. பழனி குருநாதன் வீட்டில் சொத்து பிரச்சனை இருந்து வரும் நிலையில் சந்தேகத்தின் அடிப்படையில் பழனி குருநாதனின் அண்ணன்கள் மனோகர் ,பாஸ்கர் ஆகிய இருவரை போலீசார் மயிலாடுதுறை காவல் நிலையம் அழைத்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சென்னை தண்டையார்பேட்டை மாநகராட்சி 4வது மண்டல கூட்டத்தில் 10 கோடி மதிப்பீட்டில் 73 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன





சென்னை,ஜூன்,14

சென்னை தண்டையார்பேட்டை மாநகராட்சி நான்காவது மண்டலத்தில் மாதாந்திர மண்டல குழு கூட்டம் மண்டல குழு தலைவர் நேதாஜி யு கணேசன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்தில் திமுக காங்கிரஸ் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சேர்ந்த மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் குடிநீர் வாரிய அதிகாரிகள் சுகாதாரத்துறை அதிகாரிகள் மின்வாரிய அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வியாசர்பாடி மகாகவி பாரதியார் பகுதியில் சாலைகளை ஆக்கிரமித்து கனரக வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டு இருப்பதாகவும் இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாகவும், மேலும் தொழிற்சாலைகளுக்கு தயார் செய்யப்படும் பேலட் தயாரிக்கும் கடை வைத்திருப்பதால் அங்கு சாலைகளில் ஆணிகள் போட்டு விட்டு செல்வதால் தினமும் ஏராளமான வாகனங்கள் பஞ்சர் ஆகி பழுது ஏற்படுவதாகவும் இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என புகைப்பட ஆதாரங்களுடன் 37 வது வார்டு காங்கிரஸ் கட்சி கவுன்சிலர் டில்லி பாபு சுட்டி காட்டி அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்

பின்னர் மண்டல குழு தலைவர் நேதாஜி யு கணேசன் பேசுகையில் கூட்டத்தில் 10 கோடி மதிப்பீட்டில் 73 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன இதில் முக்கிய தீர்மானமாக மாநகராட்சி பள்ளி தரம் உயர்த்த 86 லட்சம் புதுக்கப்பட்டுள்ளது தேசிய நகர்ப்புற வாழ்வாதார இணக்கம் மூலம் 633 தற்காலிக பணியாளர்கள் நியமிக்க உள்ளனர் மேலும் சாலை வசதி பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் மின்சாரம் வழங்குவது கழிவுநீர் அடைப்பு ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொள்வதும், பொதுமக்களுக்கு சிரமமின்றி பிறப்பு இறப்பு சான்றிதழை உடனடியாக வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது என்று தெரிவித்தார்



▶ உச்சிரியு கராத்தே போலுகண் பள்ளியின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சென்னை திருவொற்றியூர் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் தமிழ் திரைபட காமெடி, மற்றும் வில்லன் நடிகர் மகாநதி சங்கர், மற்றும் திருவொற்றியூர் ஆப்பிள் கிட்ஸ், ஏரோ கிட்ஸ் பள்ளி ஒருங்கிணைப்பாளர் பரீத் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர் கராத்தே மாஸ்டர்கள் ஷஹான் சிவி. நிஷோக், எஸ் சீனிவாசன் முன்னிலையில் கராத்தே தற்காப்பு கலை குறித்து பயிற்சி பெற்ற மாணவர்கள் செய்து காண்பித்தனர் கராத்தே பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு நடிகர் மகாநதி சங்கர் சான்றிதழ் மற்றும் கலர் பெல்ட் வழங்கி பாராட்டினார்.



# அதிமுக ஆட்சியில் லஞ்சம்: தலைமைச் செயலகத்தில் அமலாக்கத்துறை சோதனை

# ஜெயலலிதாவுக்கு எதிராக அண்ணாமலை அவதூறு : அதிமுக கண்டனத் தீர்மானம்





# காலநிலை மாற்ற செயல்திட்ட அறிக்கையை வெளியிட்டார் முதல்வர்


சென்னை / புதுக்கோட்டை | 14.06.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

14.06.2023 புதன்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

எம். எஸ். கில் , இந்திய தேசிய காங்கிரஸ் அரசியல்வாதி (பி.1936)



கௌதம நீலாம்பரன் , தமிழக வரலாற்றுப் புதின எழுத்தாளர் (பி.1948) (இ.2015)



குமார் மங்கலம் பிர்லா , இந்தியத் தொழிலதிபர் (பி.1967)



ராஜ் தாக்ரே , மகாராட்டிர அரசியல்வாதி (பி.1968)



## இன்றைய நினைவு நாள்

க. சீ. கிருட்டிணன் , இந்திய இயற்பியலாளர் (பி.1898) (இ.1961)



கந்தமுருகேசனார் , ஈழத்துப்பெரியார், மூதறிஞர் (பி.1902) (இ.1965)



அ. தாமோதரன் , தமிழக இந்தியவியலாளர் (பி.1935) (இ.2019)



## உலக குருதிக் கொடையாளர் நாள்